உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்


e-magazine

www.aanmeegamalar.com

வெளியிடும்


# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்


மலர்-8 இதழ்-191

பிப்ரவரி 1-15 2026




## யுகந்தோறும் தோற்கும் கடவுள்

e-magazine

## வேலை தேடுவோர் விநாயருக்கு செய்யவேண்டிய பரிகாரம்

# கழுகுமலையின் வரலாறு

ராவணனால் ஜடாயு கொல்லப்பட்டார். ராமனால் இறுதிக் காரியங்கள் செய்யப்பட்டு ஜென்ம சாபல்யம் பெற்றார். இதை அனுமார் மூலம் அறிந்த ஜடாயுவின் தம்பி சம்பாதி என்ற கழுகு மகமுனிவர், ராமனிடம், தன்னால் தன் சகோதரனுக்கு ஈமக்கிரியை செய்ய இயலாமல் போயிற்றே, இதனால் ஏற்பட்ட பாவம் எப்போது தீரும்? எங்குபோய் இதை களைவது?என்றார்.

அதற்கு ராமன், நீ கஜமுகபர்வதத்தில் உள்ள தீர்த்தத்தில் நீராடி பூஜை செய்து வந்தால் இதற்கான விடை கிடைக்கும், என்றார்.

இதன் பிறகு பல ஆயிரம் ஆண்டுகள் கடந்து விட்டன. முனிவர் கஜமுக பர்வதத்திலேயே தங்கியிருந்தார். அப்போது, முருகன் சூரபத்மனை வதம் செய்வதற்காக இவ்வழியாக வந்தார்.

அந்நேரத்தில் முனிவர்களையும், மக்களையும் சூரபத்மனின் தம்பி தாரகாசூரன் துன்புறுத்தி கொண்டிருந்தான். முருகன் தாரகாசூரனை ஐப்பசி பஞ்சமி திதியில் வதம் செய்தார். வதம் செய்த களைப்பு தீர, கஜமுக பர்வதத்தில் ஓய்வெடுத்தார்.

அவருக்கு தங்கும் இடம் தந்தார் சம்பாதி. அத்துடன் சூரபத்மனின் இருப்பிடத்தையும் காட்டினார். இதனால் மகிழ்ந்த முருகன், சம்பாதிக்கு முக்தி தந்தார்.

இதனால் சம்பாதி தன் சகோதரனுக்கு ஈமக்கிரியைகள் செய்ய முடியாத பாவம் நீங்கியது.

கழுகு முனிவரான சம்பாதி வசித்த கஜமுக பர்வதமே அவரது பெயரால் “கழுகுமலை” என பெயர் பெற்றது.



# பிரசாதம் என்றால் என்ன?

கோவில்களில் தரப்படும் தயிர்சாதம், புளியோதரை, பொங்கல் போன்ற உணவுப் பொருட்களை மட்டுமே நாம் பிரசாதம் என்று பெரும்பாலும் அறிந்துவைத்திருக்கிறோம்.

ஆனால் உண்மையில், பிரசாதம் என்ற சொல்லுக்கு தூய்மை, மகிழ்ச்சி, பேரின்பம், அமைதி என்று பொருள்.

வழிபாட்டின் மூலம் இந்த இன்பங்களை மனம் அடைவதே உண்மையான பிரசாதம் எனப்படுகிறது. பக்தியுடன் தினசரி பூஜைசெய்து இறைவனின் விக்ரஹத்தை காணும்போது மனதில் ஏற்படும் அமைதியே உண்மையான பிரசாதம் என வேதங்கள் சொல்கின்றன.

இந்த பிரசாதம் இறை நம்பிக்கை, சிந்தனை, செயல் போன்ற அனைத்திலும் இறைவன்கலக்கு போது இறைவனால் பக்தனுக்கு கிடைக்கும்.

ஆனால் இந்த நிலைக்கு முன்னேறும் ஆரம்பகட்டத்தில் உள்ள சாதாரண பக்தனும், கோவிலுக்கு சென்று வரும்போது இறையின் பால் இழுக்க வேண்டும் என்பதற்காக இறைவனுக்கு நைவேத்தியம் செய்த உணவை மனிதர்களுக்கு கொடுக்கின்றனர்.

நைவேதிய உணவில் உள்ள இறை சக்தி மனித உடலில் சேரும் போது, மேற்கண்ட இறை நம்பிக்கை, சிந்தனை, செயல் போன்றவைகளை தூண்டும் மருந்தாக பயன்படும் என்பதால் கோவிலில் கொடுக்கும் உணவிற்கு பெயரும் பிரசாதம் என்று குறிப்பிட்டனர்.



e-magazine
aanmeegamalar.com

# விநாயகர் ஞானப்பழம் பெற்ற திருத்தலம்



e-magazine
aanmeegamalar.com

வேலூரில் இருந்து 22 கிலோ மீட்டர் தொலைவில், ராணிப்பேட்டைக்கு அருகில் உள்ளது வில்வநாதேஸ்வரர் திருக்கோயில். விநாயகர், 'அம்மையப்பன்தான் உலகம்; உலகம்தான் அம்மையப்பன்' என உலகிற்கு அறிவித்த திருத்தலமே, 'திருவலம்' ஆகும். வலம் வந்ததை உணர்த்துவதால் இது திரு வலம் என்றாகி நாளடைவில் திருவல்லம் என் றாகி விட்டது. இத்தல ஈசனின் பெயர் வில்வநாதேஸ்வரர். அம்பிகை பெயர் வல்லாம்பிகை.

ஆன்மிகமலர் .காம்

ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் ஏழு நிலை ராஜகோபுரம், மூன்று பிரா காரங்கள் கொண்ட பிரம் மாண்ட மான கோயில் இது.

இக்கோயிலின் தல விருட்சம் வில்வம். இங்கு பிரசாதமாக வில்வமே தரப்படுகிறது. இதை சாப்பிட்டால் குழந்தை பாக் கியம் கிடைக்கும் என்றும், சருமம் சம்பந்தப்பட்ட நோய்கள், மந்த புத்தி நீங்கும் என்பதும் நம்பிக்கை. இக்கோயிலில் தட்சிணாமூர்த்தியின் சீடரான சனகரின் ஜீவசமாதி உள்ளது. இங்கு அமர்ந்து நிறைய பேர் தியானம் செய்கிறார்கள்.

இங்குள்ள விநாயகர் கனி வாங்கிய பிள்ளையார் என அழைக்கப்படுகிறார். அவரின் துதிக்கையில் மாங்கனி ஒன்று உள்ளது. முருகனுக்கும் விநாயக ருக்கும் சிவபெருமான் வைத்த போட்டியில் வென்ற விநாயகர் அந்த ஞானப் பழத்துடன் இத்தலத்தில் வந்து அமர்ந்ததாக தல வரலாறு கூறுகிறது. இங்குள்ள முருகனை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.



கனி வாங்கிய பிள்ளையார்




# தேயும் காலனிகளின் மர்மம்

இந்த படங்களில் உள்ள காலணிகளுக்கு, பூ வைத்து உள்ள காரணம் தெரியுமா?

ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டுள்ள, பெரிய பெருமாள் அணிந்து கொண்டு, தேய்மானத்திற்கு பின், கழட்டி வைக்கப்பட்டு, ஸ்ரீரங்கம், திருக்கொட்டாரம் எனும் இடத்தில், தூணில் மாட்டி வைக்கப்படும்... !!

புதிய, பாதணிகள் செய்ய, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பிரத்யோக, பாதணிகள் அரங்கனுக்காக, செய்பவர்கள் இருக்கிறார்கள். வலது பாதணி ஒருவரிடமும், இடது பாதணி மற்றொருவரிடம், செய்ய கொடுப்பார்கள்.


திருக்கொட்டாரம் தூணில் பெருமாளின் காலனிகள்

இருவரும், ஒரே ஊரில் இல்லாமல், வெவ்வேறு ஊர்களில் இருப்பவர்கள். பாதணிகள் தனித்தனியாக செய்வார்கள். 48 நாட்கள், உணவு கட்டுப்பாடு இருந்து விரதம் மேற்கொண்டு பாதணிகளை செய்வார்கள். இவைகள் 6 மாதத்திற்கு ஒரு முறை, செய்யவேண்டும். .!!

இவர்கள் பாதணிகளை கொண்டு வந்து, அரங்கனுக்கு சமர்ப்பிக்கும்போது கோயில் மரியாதையை செய்வார்கள். பழைய பாதணிகளைஅரங்கன் திருவடிகளை விட்டு கழட்டிவிட்டு, புதிய பாதணிகளை மாற்றிவிடுவார்கள்...!!

அதிசயமான விஷயம் என்னவென்றால், திருவடிகளை விட்டு எடுத்துள்ள பழைய பாதணிகளில் இரண்டிலும் பாத பகுதிகளில் தேய்மானம் இருக்கும்...!!

இவ்வாறு மாற்றியுள்ள தேய்மானம் அடைந்தஅரங்கன் பாதணிகள் திருக்கொட்டாரம் தூணில் பக்தர்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஸ்ரீரங்கம் கோவில் சென்றால், யார் வேண்டுமானாலும், இந்த அரங்கன் அணிந்து, தேய்மானம் கண்டுள்ள, பழைய பாதணிகளை, கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம். அதிசயமான தெய்வ செயல் இதுதான்.

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியிட்டுள்ள

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

முழுவதும் முருகன் குறித்த ஏராளமான தகவல்களுடன் தயாரான மலர்

# பழனி தண்டாயுதபாணி தைப்பூச சிறப்பிதழ்




தடைகளை அகற்றி பழனி முருகனை தரிசிக்க உதவும் விக்ன விநாயகர்

பழனி முருகனும் பஞ்சாமிர்தமும்!

முருகனின் பிரசித்திபெற்ற 151 கோவில்கள்

போகர் உருவாக்கிய இரண்டாவது நவபாஷான முருகன் சிலை

சுவாமிமலை ரகசியம்

பெருமாள் போன்று காட்சியளிக்கும் சிறுவாபுரி முருகன்

உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் தைபூசம்

வடபழனி முருகன் கோவிலை உருவாக்கிய சித்தர்கள்

பக்தர்களை காக்கும் கணக்கன்பட்டி சித்தர்

மேலும் தகவல்களுக்கு மற்றும் புத்தகம் கிடைக்கும் இடங்கள்:

Ph:9994323622 / 9994162182 9444228203

# குருநாதர்களின் மகிமைகள்

## கிருபானந்த வாரியாரின் அற்புதமான விளக்கம்

திருமுருக கிருபானந்த வாரியார் ஒருசொற்பொழிவின் போது மிக உணர்ச்சிகரமாக குருமார்களைப் பற்றி பேசினார்.


அவர் ஆற்றிய உரையில், மனிதன் மனிதனாக வாழ வேண்டிய முறைகளையும் குருவின் மேன்மையைப் பற்றியும் விளக்கினார். அதற்கு உதாரணமாக அவர் சொன்ன சம்பவம் இதுதான்:

மனிதன் முதலில் வணங்க வேண்டியது மாதா. இரண்டாவது பிதா. மூன்றாவது குரு. நான்காவதாக தெய்வம். அப்படி ஒரு சம்பவம்...

சங்கராச்சார்ய மஹா ஸ்வாமிகள் அப்போது காஞ்சிபுரத்தில் இருந்தார். வாரியார் அவரை தரிசனம் செய்யச் சென்றார். மஹா ஸ்வாமிகள் பூஜையில் இருந்ததால், வாரியாரால் அவரை தரிசிக்க இயலவில்லை.

அவரது பூஜை முடிவதற்குள் காமாட்சி அம்மனையும் மற்ற கோயில்களையும் தரிசித்துவிட்டு வரலாம் என்று கிளம்பினார் வாரியார்.

தரிசனம் முடிந்து திரும்பி வரும் வழியில் சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதரைச் சந்தித்தார் வாரியார். இருவரும் கோயிலின் ஒரு மூலையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது சுமார் எண்பது வயது மதிக்கத் தக்க மூதாட்டி ஒருவர் ஊன்றுகோலுடன் மெதுவாக நடந்து வந்து, தீட்சிதரை வணங்கினார்.



பின்பு அவரிடம், ‘‘எனக்கு ஒரு ருத்திராட்ச மாலை கொடுங்களேன்!’’ என்று கேட்டார். அதற்கு தீட்சிதர், ‘‘என்னிடம் தற்போது ருத்திராட்ச மாலை எதுவும் இல்லையே’’ என்றார்.

உடனே அந்த மூதாட்டி, ‘‘காஞ்சிப் பெரியவரிடம் சொல்லி வாங்கித் தாருங்கள்’’ என்று கேட்டுக்

e-magazine
aanmeegamalar.com

கொண்டார். அதற்கு தீட்சிதர், ‘‘பெரியவாளிடம் என்னவென்று சொல்லி ருத்திராட்சம் கேட்க வேண்டும்?’’ என்றார்.

அந்த மூதாட்டி தன் பெயரைக் கூறி, ‘‘மஹா பெரியவரை அவர் தாயார் பிரசவித்த காலத்தில், உடன் உதவிக்கு இருந்த மருத்துவச்சி கேட்டதாகச் சொல்லுங்கள்!’’ என்று கூறிவிட்டு விடைபெற்றுக் கிளம்பினார்.

வாரியாரும் தீட்சிதரும் பேசியவாறு மடத்தை அடைந்தனர். அன்று மஹா பெரியவர், பூஜையை சீக்கிரமாக முடித்துக் கொண்டு மாலை ஏழு மணி அளவில் வேத விற்பன்னர்களுக்கு ஆகமத் தேர்வு நடத்தினார். அதில் வெற்றி பெற்றவர் களுக்கு விருது, சால்வை ஆகியவை அளித்து அனுப்பி வைத்தார்.

இரவு சுமார் ஒன்பது மணியளவில் வாரியாரும் மஹா பெரியவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். மடத்துச் சீடர் அந்த அறையைச் சுத்தம் செய்ய வந்தார். அப்போது ஒரு சால்வையும் ருத்திராட்ச மாலை ஒன்றும் அங்கு இருந்தன. அந்தச் சீடரை அழைத்த மஹா ஸ்வாமிகள், ‘‘உடனே சேங்காலியை (அனந்தராம தீட்சிதரை) அழைத்து வா!’’ என்றார். சீடர் அப்படியே செய்தார்.

ஸ்வாமிகள் தீட்சிதரிடம், ‘‘இந்த சால்வையும் ருத்திராட்ச மாலையும் உனக்குத் தான்!’’ என்று அழுத்தமாகக் கூறினார். தீட்சிதருக்கு எதுவும் புரியவில்லை. பெரியவர் சிரித்துக் கொண்டே, ‘‘நீ இந்த மாலையையும் சால்வையையும் என்ன செய்யப் போகிறாய்?’’ என்று வினவினார்.

தீட்சிதர் மௌனமாக இருந்தார். உடனே மஹா பெரியவர் அவரிடம், ‘‘இவற்றைப் பேசா மல் (பெயரைச் சொல்லி) அந்தக் கிழவியிடம்சேர்த்து விடு. இந்த தேகத்தை (சரீரத்தை) அடையாளம் காட்டினாளே, அவளுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்!’’ என்று கூறினார். வாரியாரும் தீட்சிதரும் சிலிர்த்துப் போனார்கள்.

பிறகு மடத்துப் பிரசாதங்களுடன் ருத்திராட்ச மாலையையும் சால்வையையும் சீடனிடம் கொடுத்து தீட்சிதர் மூலம் அவற்றை அந்தக் கிழவியிடம் கொடுக்கச் செய்தார். வாரியாரும் தீட்சிதரும் வியப்பு மேலிட... கண்களில் நீர் மல்க மஹா பெரியவாளை நமஸ்கரித்தனர்.



## கல் பந்து தூண்: விளையாடலாம் வெளியே எடுக்க முடியாது



திருச்சியிலிருந்து முசிறி செல்லும் சாலையில் 15 கி.மீ தூரத்தில் உள்ள தேவாரத்தலம் திருவாசி. இந்த கோவிலில் நுழைந்தவுடன் வலதுபுறம் இருக்கும் ஒரு தூணில் நாம் காணலாம்.

இந்த தூணின் மூன்று பக்கங்களில் சுமார் ஒரு அடி நீளத்திற்கு நீள் செவ்வக துவாரம் அமைந்திருக்கின்றது. தூணுக்குள் கல்லாலான ஒரு பந்து இருக்கின்றது. இந்தப் பந்தை நாம், தூணுக்குள் ஒரு அடி தூரத்திற்கு மேலும் கீழும் நகர்த்த முடியும். ஆனால் அந்தக் கல் பந்தை, நாம் தூணை விட்டு வெளியே எடுக்க முடியாது. இப்படி ஒரே கல்லிலான தூணில் மூன்று பக்கம் துவாரம் ஏற்படுத்தி, அதன் உள்ளிருக்கும் கல்லை பந்து போல் வடிவமைத்து ஆடவிட்டு இருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது.

# பக்தனை காக்க தயார் நிலையில் நந்தி

# கோபுர வாசலை பார்த்தவாறு அமர்ந்த காரணம்



கோபுர வாசலை நோக்கி அமர்ந்திருக்கும் நந்தி

ராணிப்பேட்டைக்கு அருகில் உள்ளது வில்வநாதேஸ்வரர் திருக்கோயில்.

இது முற்றிலும் சிவன் கோவிலாக இருந்தாலும், இந்த கோவிலில் வீற்றிருக்கும் நந்தி பகவான் சற்று வித்தியாசமான திசையில் அமர்ந்துள்ளார்.

சிவனை நோக்கி அமராமல் வாசலை நோக்கி பிரம்மாண்டமாக மிகப்பெரிய நந்தி அமர்ந்துள்ளார்.

ஆன்மிகமலர் .காம்

இதற்கும் ஒரு காரணம் கூறப்படுகிறது. உள்ளது. அதற்கு ஒரு புராண வரலாறும் உண்டு.

கஞ்சன் மலையிலிருந்து திருவல்லத்திற்கு இறைவனுக்கு அபிஷேகம் செய்ய தீர்த்தம் கொண்டு வரும் அர்ச்சகரை கஞ்சன் என்பவன் தொல்லை செய்ததாகவும் சிவபெருமானின் வாகனமான நந்தி கஞ்சனை எட்டு பாகங்களாக கிழித்தார் எனவும் புராணங்கள் கூறுகிறது.

சிவபெருமானிடம் இறவா வரம் பெற்றிருந்த கஞ்சன் அவ்விடம் விட்டு ஓடிவிட்டார் என்றும் தலபுராணம் கூறுகிறது. அத்துடன் இறவாமல் இருக்கும் கஞ்சன் மீண்டும் வருகிறானா என்பதை கண்காணிக்க நந்தி தேவர் கோயிலின் வாசலை நோக்கியவாறு வீற்றிருக்கிறார் என தல வரலாறு கூறுகிறது.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரால் தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டு தலங்களில் இது 10வது தலம். இக்கோயிலில் மாசி மாதம் பிரம்மோத் ஸவம் மிகக் கோலாகலமாக நடைபெறுகிறது.



உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை

# tabloid வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

## இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!





தொடர்ப்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203



# கங்கையின் பாவம் தீர்த்த குப்த கங்கை

# ஒருநாள் தங்கினால் சிவகணமாக பிறக்கலாம்



ஒரு சமயம் சிவபெருமான் உமையவளுடன் ரிஷப வாகனத்தில் உலகை வலம் வந்தார். அப்போது அம்பிகைக்கு பல திருத்தலங்களைக் காட்டி அவற்றின் சிறப்புகளை எடுத்துரைத்தபடி வந்தார் ஈசன். காசி, காஞ்சிபுரம், காளகஸ்தி என பல திருத்தலங்களை காட்டிய ஈசன், ஸ்ரீவாஞ்சியத்தின் மகிமையை கூறும்போது, 'காசியை விட பன்மடங்கு உயர்வான புண்ணிய தலமிது. இங்குள்ள தீர்த்தமான குப்த கங்கை, கங்கையை விடவும் புனிதமானது. இந்தத் தலத்தில் ஓர் இரவு தங்கியிருந்தாலே கயிலாயத்தில்




சிவகணமாய் இருக்கும் புண்ணியம் கிடைக்கும்' என்று கூறினார். இதையடுத்து, திருவாஞ்சியத்தில் தங்கியிருக்க உமையவள் திருவுளம் கொண்டாள். எனவேதான் இந்தத் தல அம்பிகைக்கு 'வாழ வந்த நாயகி' என்ற பெயர் வந்தது.

ஒரு சமயம் மகாலட்சுமி தாயார், மகாவிஷ்ணுவிடம் கோபம் கொண்டு பிரிந்து சென்றாள். திருமகள் இல்லாததால் வைகுண்டம் விட்டு பூலோகம் வந்தார் மகாவிஷ்ணு. சந்தன மரக் காடுகள் நிறைந்த பகுதியில் சிவலிங்கம் ஒன்றைக் கண்டு அதற்கு பூஜை செய்து வழிபட்டார். இதையடுத்து ஈசன், மகாலட்சுமியை அழைத்து வரச் செய்து மகாவிஷ்ணுவுடன் சேர்த்து வைத்தார்.

ஆன்மிகமலர்

'திரு' என்று அழைக்கப்படும் திருமகளை மகாவிஷ்ணு வாஞ்சையாய் விரும்பி சேர்ந்த இடம் என்பதால் இந்தத் தலம் திருவாஞ்சியம் என்று பெயர் பெற்றது. கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து வாழும் கணவன், மனைவி இங்கு வந்து இறைவனை வழிபட்டால் ஒற்றுமை பலப்படும் என்பது நம்பிக்கை.

காசியில் வழங்கப்படுவது போல், ஸ்ரீவாஞ்சியத்திலும் காசிக் கயிறு எனும் கருப்பு கயிறு வழங்கப்படுகிறது. காசியில் பாவமும் புண்ணியமும் சேர்ந்தே வளர்கின்றன. அதனால் நம் பாவங்களுக்கு ஏற்ப காசியில் பைரவர் தண்டனை வழங்குகிறார். ஆனால், திருவாஞ்சியத்தில் புண்ணியம் மட்டுமே வளர்கிறது. அதனால் பைரவர் தண்டனை இத்தலத்தில் இல்லை. இத்தல பைரவர் தண்டத்தைக் கீழே வைத்துவிட்டு தியான நிலையில் யோக பைரவராக மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அவருடன் நாய் வாகனமும் இல்லை.

இத்தலத்தில் உள்ள குப்த கங்கை என்னும் தீர்த்தம், சிவபெருமானின் சூலத்தால் கங்கையின் பாவங்களைப் போக்கிட உருவாக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. காசியில் தன்னிடம்வந்து நீராடுபவர்களின் பாவங்களை கங்கைஏற்கிறாள்.

தனது ஆயிரம் கலைகளில் ஒன்றை மட்டும் காசியில் விட்டு விட்டு, மீதமுள்ள 999 கலைகளுடன் இந்த குப்த கங்கையில் ரகசியமாக உறைகிறாள். ஒவ்வொரு கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகள் அதிகாலை நேரத்தில் இந்த குப்த கங்கையில் நீராடுபவர்களின் பாவங்கள் அனைத்தையும் போக்கி, சிவபெருமான் அம்பிகை சமேதராக அவர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

## ஞான வேல் பெற்ற தினமே தைப்பூசம்

அசுரர்களுடன் போரிட தலைமை தாங்கி செல்லக்கூடிய சக்தி வாய்ந்த தலைவன் தேவை என ஈசனிடம் வேண்டினர். கருணைக்கடலான எம்பெருமான், தன் தனிப்பட்ட சக்தியிலிருந்து, நெற்றிக்கண்ணிலிருந்து உருவானவர்தான் கந்தன். நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகள் ஆறு அழகிய குழந்தைகளாகின. அந்தகுழந்தைகளை கார்த்திகை பெண்கள் வளர்த்தனர்.பின்னர்ஆறுமுகமாக உருவெடுத்தார். ஆண்டி கோலத்தில் பழனி மலை மீது நின்றிருக்கும் முருகனுக்கு, அன்னை பராசக்தி தன் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டி ஞானவேல் வழங்கியது இந்த தைப்பூச திருநாளில் தான் என புராணங்கள் சொல்கின்றன.



# வனதேவதை என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட

# சாது கிருஷ்ணவேணி அம்மா!



பக்தர்களால் "வனதேவதை" என்று அன்புடன் அழைக்கப்பட்டகிருஷ்ணவேணி அம்மா திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் மலைக் குகைகளில் வாழ்ந்த பெண் துறவி.

பொதிகை மலையில் 75 வருடங்களுக்கு மேலாக தன்னந்தனியாக வசித்து வந்தார். பலமுறை ஸ்ரீ அகத்திய முனிவர் உள்ளிட்ட சித்தர்கள் கிருஷ்ணவேணி அம்மாளுக்கு காட்சி கொடுத்துள்ளனர்.120 ஆவது வயதில் சித்ரா பௌர்ணமி அன்று இந்த ஸ்தூல தேகத்தை துறந்தார். இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இறைவன் கருணைக் கடல் அனைவருக்கும் பொதுவானவர். அவரை உள்ளுணர்ந்து அனுபவிப்பவர்களுக்கே சாகரத்தின் தன்மை புலப்படும். வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு இறை அனுபவம் ஒரு பிரமிப்பான விஷயம் மட்டுமே.

இறை நிலையை ஒரு சிலருக்கு சிறு வயதிலேயே அடையும் பாக்கியம் ஏற்படுகிறது.சிலருக்கோ மத்திம வயதை தாண்டி, அடைய முடிகிறது.

ஆன்மிகமலர் .காம்


இன்று நான் உங்களுக்கு சாது ஸ்ரீ கிருஷ்ணவேணி அம்மாளைப் பற்றிய அபூர்வ செய்திகளை சித்தர்களின் குரல் வாயிலாக சொல்ல போகிறேன்....

கருணை பொங்கும் முகத்தோடு தன்னை நாடி வரும் அன்பர்களின் தேவையை அறிந்து அருள் செய்தவர். கடலூர் முதுநகரை சேர்ந்த லட்சுமி அம்மாள் அரங்கசுவாமி என்பவருக்கு மகளாகப் பிறந்தவர் கிருஷ்ணவேணி. சிறுவயதிலேயே உறவினருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். கணவரின் வேலை நிமித்தமாக வட இந்தியாவிற்கு பயணமான கிருஷ்ணவேணி அம்மாள், பாட்னா, ஹரித்வார் போன்ற இடங்களுக்கு சென்றுள்ளார்.

அதுவே அவரின் ஆன்மீக தேடலுக்கு ஆரம்ப புள்ளி. வாழ்க்கைப் பயணம் சுமூகமாக சென்று கொண்டிருக்கும்போது திடீரென அவரின் கணவர் இறந்துவிட, அவரின் துறவற வாழ்க்கை ஆரம்பமானது. அவரின் பழக்கவழக்கங்கள் மற்றவர்களுக்கு பித்தர் போல் இருக்கவே அவர் வீட்டை விட்டு வெளியேறி விட்டார்.

திருச்செந்தூர் சென்ற கிருஷ்ணவேணி அம்மாள் ஒரு சித்தர் தன் பின்னே தொடர்ந்து வரும் படி ஆணையிட, அவரைத் தொடர்ந்து பாபநாசம் பொதிகை மலைக்கு சென்றார். சித்தர் அங்கிருக்கும் ஒரு குகையை சுட்டிக்காட்டி அங்கு இருக்கும்படி கூறினார். அங்கு ஒரு சிவலிங்கமும் இருக்கின்றது. அதுவே கிருஷ்ணவேணி அம்மாளின் இருப்பிடமாக மாறியது. அக்குகையில் ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேல தவம் செய்திருக்கிறார். இந்த குகை புலஸ்தியர் தவம் செய்த இடம் என நம்பப்படுகிறது.

துறவரம் பூண்ட ஸ்ரீ கிருஷ்ணவேணி அம்மா



பொதிகை மலையில் 75 வருடங்களுக்கு மேலாக தன்னந்தனியாக வசித்து வந்தார். பலமுறை ஸ்ரீ அகத்திய முனிவர் உள்ளிட்ட சித்தர்கள் கிருஷ்ணவேணி அம்மாளுக்கு காட்சி கொடுத்துள்ளனர். ஸ்ரீதுர்க்கை அடிக்கடி காட்சி கொடுத்து வழி நடத்தியதாக கிருஷ்ணவேணி அம்மாள் கூறியிருக்கிறார்.

பொதிகை மலையில் அகத்தியர் அருவிக்கு மேலே கல்யாண தீர்த்தத்திற்கு மிக அருகில் கிருஷ்ணவேணி அம்மாள் வசித்த இடம் இருக்கிறது. சிவன் பார்வதி திருமண கோலத்தை காண உலகமே திரண்டிருந்த காலகட்டத்தில் வடதிசை மக்களின் சுமை தாங்காமல் தாழ்ந்த விட அதை சமன் செய்வதற்காக அகத்தியர் தென்திசைக்கு அனுப்பப்பட்டார். தென்னிந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பொதிகை மலைக்கு வந்த ஸ்ரீ அகத்திய முனிவர் மலையில் தவம் மேற்கொண்டதற்கு புராண சான்று இருக்கின்றன . இங்கு அகத்தியருக்கு சிவன் பார்வதி திருமண கோலத்தில் காட்சி கொடுத்த இடமே கல்யாண தீர்த்தம்.

தனி பெண்மணியாக யாருமே அதிகம் நடமாடாத இடத்தில் வசித்த கிருஷ்ணவேணி அம்மாளுக்கு பல நேரங்களில் குகைக்கு வெளியே கரடியும் உள்ளே பாம்பும் காவல் காத்து கொண்டிருந்தன. வனதேவதை போல் வாழ்ந்த கிருஷ்ணதேவி அம்மாளை சில சமயம் பார்க்க வரும் அன்பர்கள் பழம் உணவு கொடுத்துள்ளார்கள். அவ்வாறு கொடுத்தவர்களின் வாழ்வில் ஏற்றங்கள் வர ஆரம்பித்தது. அதிலிருந்து சாது கிருஷ்ணவேணி அம்மாள் புகழ் பரவ ஆரம்பித்தது. அவரைக் காண மக்கள் கூட்டம் வர ஆரம்பித்தது.

பக்தர்களின் நலன் பொருட்டு கிருஷ்ணவேணி அம்மாள் கீழிருந்து மேல் கல்யாண தீர்த்தம் வரை படிக்கட்டுகள் தானே அமைத்து வசதி செய்து கொடுத்தார். அங்கே ஒரு மடமும் அமைத்தார்.

கிருஷ்ணவேணி அம்மாளின் தவ ஆற்றல் அளப்பரியது. மிகவும் வறட்சியான காலத்தில் வருண ஜெபம் செய்து மழையை பொழியச் செய்துள்ளார்.

ஒரு சமயம் வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளக்காடாக காட்சி

அமைத்த கல்யாண தீர்த்தம், அகத்தியர் அருவி எங்கேயும் கிருஷ்ணவேணி அம்மாவின் நடமாட்டம் தெரியவில்லை. என்ன ஆனாரோ அனைவரும் பயந்தனர். நான்கு நாட்கள் கழித்து குகையிலிருந்து எந்த பாதிப்பும் இல்லாமல், மிகவும் மலர்ச்சியாக வெளியே வந்தார் சாது கிருஷ்ணவேணி அம்மாள் .

அவர் காலத்தில் இருந்த சித்தர்களான மாயம்மா, பூண்டி சித்தர் போன்ற மகான்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர் கிருஷ்ணவேணி அம் மாள்.

2011 ஆம் ஆண்டு, தன்னுடைய 120 ஆவது வயதில் சித்ரா பௌர்ணமி அன்று இந்த ஸ்தூல தேகத்தை துறந்தார். இறைவனுடன் இரண்டறக் கலந்தார். இன்றும் அவரின் அஸ்தி அவர் கட்டிய மடத்தில் வைத்து பூஜிக்கப்படுகிறது. அவரை எண்ணி வேண்டிய செயல்கள் யாவும் இன்றும் அவர்கள் பக்தர்களுக்கு நடந்தேறுகிறது.

அகத்தியரின் அருள் பெற்ற சித்திரை, அவிட்டம், மிருகசீரிஷம் அன்பர்கள் சாது கிருஷ்ணவேணி அம்மாளை வணங்கி வர அவர்களுக்கு மனோபலம் அதிகரிக்கும்.

மேலும் ஜாதகத்தில் குரு / சந்திரன்/ சனிக்கு 1, 2, 5, 9ல் கேது இருக்க பெற்றவர்களுக்கு எளிதாக சித்தர்களின் தரிசனமும், அருளும், ஆசியும் கிடைக்கும். இவர்கள் கிருஷ்ணவேணி அம்மாளை தியானித்து வர நன்மை பயக்கும்.

இந்த அமைப்பு இல்லாமல் இருந்தாலும் மேற்கூறிய கிரகங்களுக்கு 1, 2, 5, 9ல் கோட்சார கேது வரும் காலங்களிலும் சித்தர்களின் தரிசனம் கிடைக்கப் பெறும்.

சாது ஸ்ரீ கிருஷ்ணவேணி அம்மாள் மடம்:

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் அகத்தியர் அருவிக்கு மேலே சாது கிருஷ்ணவேணி அம் மாள் மடம் உள்ளது.

திருநெல்வேலியில் இருந்து, 50 கி.மீ., தொலைவில் உள்ளது. பாபநாசம். இங்கிருந்து, 4 கி.மீ. தூரத்திலுள்ள அகத்தியர் அருவிக்கு ஆட்டோ, கார்களில் சென்று, படிக்கட்டுகளில் ஏறினால், கல்யாணி தீர்த்தத்தை தரிசிக்கலாம். இதன் அருகில் தான் கிருஷ்ணவேணி அம்மா வின் ஆசிரமம் அமைந்துள்ளது.

அவர் பக்தர்களால் "வன தேவதை" என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

சிறு வயதிலிருந்தே குகைகளில் தனிமையில் வாழ்ந்து வந்தார் அவர் யாருக்கும் பயப்படாதவள்,



தன்னை சித்தர்களின் குழந்தையாக கருதப் பட்டார். பழங்கள், பால், பிஸ்கட் போன்ற எளிய உணவுகளை மட்டும் எடுத்துக்கொண்டு, தன் உணவில் ஒரு பகுதியை காகங்களுக்கும் நாய்களுக்கும் கொடுப்பார்.

பெரும்பாலும் அவள் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்து, சிவ பெருமானின் மந்திரங்களை உச்சரிப்பார். பெரிய துறவியை சந்தித்த பிறகு ஏராளமான பக்தர்கள் தங்கள் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொண்டனர்.

அவர் ஒரு உன்னதமான மற்றும் அன்பான இதயம் கொண்ட பெண்மணி, அவர் தனது பக்தர்களின் பிரச்சினைகளை உன்னிப்பாக தீர்க்கிறார் மற்றும் அமைதியான மற்றும் வளமான வாழ்க்கையை நடத்துவதற்கு அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கினார்.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர் களுக்கு மூலிகை மருந்துகளை அளித்து, அந்த மருந்துகளை உட்கொண்ட சில வாரங்களில் நோய்களிலிருந்து விடுபட்டார்.

அவர் 2011 ஆம் ஆண்டு ஸ்தூல தேகத்தை துறந்தார். இறைவனுடன் இரண்டறக் கலந்தார்

இவரது மடம் திருநெல்வேலி மாவட்டம் பாப நாசத்தில் உள்ளது, தினமும் ஏராளமான பக்தர்கள் புனித மடத்திற்கு சென்று பயனடைகின்றனர்.



# உலகின் பஞ்சம் போக்கிய தேவபுரீஸ்வரர் திருக்கோயில்

நாகப்பட்டினத்திலிருந்து (18 கி.மீ) கீழ்வேளூர், கச்சனம் வழியாக திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் தேவூர் உள்ளது. இங்கு அமைந்துள்ள அருள்மிகு தேவபுரீஸ்வரர் திருக்கோயில், விருத்திராசுரனை கொன்ற பழி தீர, இந்திரன் முதலான தேவர்கள் வழிபட்டு அருள்பெற்றதால், இறைவன் தேவபுரீஸ்வரர் ஆனார். தலம் தேவூர் ஆனது. தேவர்கள் வழிபட்ட தலமாதலால், இங்குள்ள அனைத்து தெய்வங்களும் “தேவ’ என்ற அடைமொழியுடன் வணங்கப்படுகிறார்கள்.

மிகவும் பழமை வாய்ந்தது மட்டுமின்றி ஒரே கோவிலில் பல்வேறு புராணங்கள் புதைந்துள்ளது.

இத்திருக்கோவில் மாணிக்க வாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர், வள்ளலார் கோச் செங்கட்சோழ மன்னனால் கட்டப்பட்ட 72 மாடக்கோயில்களில் இதுவும் ஒன்று.

ஆன்மிகமலர் .காம்

மேலும் இத்தலம் குருஸ்தலமாகவும் போற்றப்படுகிறது. வியாழ பகவான் (குரு) இத்தல இறைவனை வழிபட்டு அருள் பெற்றதால் இங்குள்ள தெட்சிணாமூர்த்தி பாதத்தில் முயலகன் இல்லை. வியாழபகவானுக்கு குரு பட்டத்தை வழங்கியதால், இங்குள்ள தெட்சிணாமூர்த்தி “தேவகுரு’ என அழைக்கப்படுகிறார்.

குரு சம்மந்தப்பட்ட தோஷங்கள் இருப்பின் இத்தலத்தில் வழிபாடு செய்தால் தோஷங்கள் விலகும் என்பது ஐதீகம். செல்வம் பெருகவும், இழந்த செல்வங்கள் மீண்டும் பெறவும், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவும் தேவபுரீஸ்வரரை வழிபாடு செய்வது சிறப்பு.

இத்தல விநாயகரை பிரும்ம வரதர் என்றும் அழைக்கிறார்கள். அஷ்ட விநாயகர் தலங்களில் இதுவும் ஒன்று. மூன்று நிலை ராஜ கோபுரம், 5 பிரகாரங்கள் உள்ளன.

சுவாமி சன்னதிக்கும் அம்மன் சன்னதிக்கும் நடுவே சுப்பிரமணியர் சன்னதி அமைந்திருப்பதால் இத்தலம் “சோமாஸ்கந்த மூர்த்தி’ தலமாகும்.








aanmeegamalar.c

பிரகாரத்தில் பாலகணபதி, பாலமுருகன், இந்திரலிங்கம், கவுதமலிங்கம், அகல்யா லிங்கம், மாணிக்கவாசகர் வழிபட்ட ஆத்மலிங்கம், நடராஜர் ஆகியோர் அருள்பாலிக்கிறார்கள்.

இத்தலத்தின் தல விருட்சம் கல்லில் வளரும் அதிசய கல்வாழை மரமாகும்.

தேவர்கள் இறைவனை வழிபட்ட போது, தேவ லோகத்தில் இருந்து வந்த இந்த வாழையும் இறைவனை வழிபட்டு தலவிருட்சமாக மூலவர் அருகிலேயே அமைந்தது என்பர்.

ஆன்மிகமலர்.காம்

திருமணபாக்கியம், புத்திர பாக்கியம் வேண்டு பவர்கள் திங்கள் கிழமைகளில் இந்த வாழைக்கு பூஜை செய்கிறார்கள்.

பொதுவாக கோயில்களில் சிவதுர்க்கை, அல்லது விஷ்ணு துர்க்கை இருப்பாள். ஆனால் இத்தலத்தில் உள்ள துர்க்கை ஒரு கையில் சங் கும், மறுகையில் மான், மழுவும் வைத்து சிவ விஷ்ணு துர்க்கையாக அருள்பாலிக்கிறாள்.

பாண்டவர்களுக்கு துணை புரிந்த விராடன் தன் மகன் உத்திரனோடு இங்கு தங்கி இறை வனை வழிபாடு செய்துள்ளான்.

உலகில் 12 ஆண்டுகள் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கவுதம முனிவர் இத்தலத்தில் தங்கி, லிங்கம் அமைத்து வழிபாடு செய்து, பொன்னும் பொருளும் பெற்று மக்களின் பசிப்பிணி போக்கிய தாக வரலாறு கூறுகிறது.


மகத நாட்டு மன்னன் குலவர்த்தனன் பரி வேள்வியில் வெற்றிபெற, இங்குள்ள இறைவனை வழிபட்டு வேள்வியை நிறைவேற்றினான்.

ராவணன் குபேரனிடம் போரிட்டு அவனது செல்வ கலசங்களை எடுத்து சென்றான்.

வருத்தமடைந்த குபேரன் தனது செல்வங்கள் மீண்டும் கிடைக்க பல தலங்களுக்கு சென்று வழிபட்டான். அப்படி வழிபாடு செய்து வரும் போது இத் தலத்தில் உள்ள சிவனுக்கு வெள்ளிக்கிழமை சுக்கிர ஓரையில் செந்தாமரைப் பூக்களால் அர்ச் சித்து வழிபாடு செய்தான்.

பூஜைக்கு மகிழ்ந்த ஈசன், குபேரனுக்கே அந்த செல்வ கலசங்கள் கிடைக்க செய்ததாக தல புராணம் கூறுகிறது.

# போகர் அருளிய விஷக்கடி வைத்தியம்



e-magazine
aanmeegamalar.com

பாம்புகள், தேள், விஷ வண்டுகள் போன்றவை கடித்தால் அதற்கான வைத்திய முறைகளை போகர் தனது “போகர் ஜெனன சாகரம்“ என்ற நூலில் மூன்று பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

**போகர் பாடல்**

“பாரப்பா புகையிலயு மயிலிரகினொடு
பண்பான வெள்ளெருக்கன் வேருங்கூடி
சீரப்பா சுருட்டிபுகை குடித்தாயானாற்
சிறப்பான கொட்டுவிஷ்ந் தீருந்தீரும்
சாரப்பா வுப்பதனைப் பொடித்துவைத்துச்
சார்வான பூரமது கொளுத்திவைத்து
நேரப்பா கண்சிரட்டைக் கொண்டுமூடி
நிலையாகக் கடித்தவிடங் கட்டப்போமே.”

ஆன்மிகமலர் .காம்

“போமென்ற குரும்பியையுந் தடவிக்கட்டப்
பொல்லாத கொட்டுவிஷம் போகும்போகும்
நாமென்ற சிரியாநங்கை வேரைத்தின்றால்
நல்லதொரு விஷமெல்லாம் நாடாதோடும்
வாமென்ற சடைச்சிவே ரரைத்துத்தின்ன
வல்லதொரு விஷங்களெல்லாம்
வாங்கும்வாங்கும்
ஆமென்ற சீந்திற்றண்டின் பாலையுண்ண
வறியாத விஷங்களெல்லாம் வாங்கும்பாரே.”

“பாரென்ற வேலியதன் சாற்றையுண்ணப்
பதினெட்டு எலிவிஷமும் பரக்கும்பாரு.”

**இதன் விளக்கம்**

புகையிலையுடன் மயிலிறகின் நடுவில் உள்ள தண்டுப்பகுதி மற்றும் வெள்ளெருக்கன் வேர் இவைகளைச் சேர்த்து சுருட்டி புகை குடிக்க விஷங்கள் நீங்கும்.

விஷக்கடி வாயில் உப்பை பொடியாக இடித்து வைத்து அதன் மேல் பூரத்தை சூடாக்கி வைத்து மூன்று கண்ணுடைய தேங்காய் சிரட்டையால் மூடி அதனை கட்டிவைத்துவிட விஷம் நீங்கும்.

விஷக்கடி வாயில் குரும்பியை தடவி துணியால் கட்டிவைக்க விஷம் நீங்கும்.

சிறியா நங்கை வேரைத் தின்றாலும், சடைச்சி வேரை அரைத்து தின்றாலும், சீந்தில் தண்டில் பாலை உண்டாலும் விஷங்கள் நீங்கும்.

கொடிவேலிச் சாற்றை உண்ண பதினெட்டு வகை எலிவிஷங்கள் நீங்கும் என்கிறார் போகர்.

# வேலை தேடுவோர் விநாயகருக்கு செய்யவேண்டிய பரிகாரம்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குவது விநாயகப்பெருமான் மட்டுமே ஒவ்வொரு பிரச்சனைக்கும் ஒவ்வொரு எளிய பரிகாரம் செய்தால், நமது சிறு பிரச்சனைகளை எளிதாக தீர்த்து வைப்பதில் விநாயகருக்கு ஈடு விநாயகர்தான்.

அந்த வகையில், வேலை செய்யும் இடத்திலும், புதிய வேலை கிடைப்பதில் சிரமப் படுபவர்களும் விநாயகருக்கு எளிய பரிகாரம் செய்தால் போதும். பணியில் உள்ள பிரச்சனைகள் தீரும், புதிய வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

பிள்ளையாருக்கு கற்பூரவள்ளி இலையின் மீது அதீத பிரியம் உண்டு. இந்த கற்பூரவள்ளி இலையில் பிள்ளையாரின் ஸ்வரூபம் இருக்கிறது. எனவே 9 கற்பூரவள்ளி இலைகளை மாலையாக கோர்த்து பிள்ளையாருக்கு போட்டு வாரம் தோறும் புதன் கிழமையில் வழிபடலாம்.

பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பார்கள். வேலை வேண்டி பிரார்த்திப்பவர்கள் புதன்கிழமையில் இந்த வழிபாட்டினை செய்வது மிகுந்த பலனைத் தரும்.

கற்பூரவல்லி இலைகளுக்கு பதிலாக 9 செவ்வாழை பழங்களை மாலையாக கோர்த்து 12 வாரங்கள் விநாயகருக்கு சாற்றி வழிபட வேண்டும். கற்பூரவல்லி இலையை விட செவ்வாழைக்கு அதிக சக்தி உண்டு. இந்த பழங்களை இடைவெளி விட்டு நூலில் மாலை போல கட்டிக் கொள்ளுங்கள்.

இதை விநாயகப் பெருமானுக்கு மாலையாக போட்டு வாரம் தோறும் புதன்கிழமை வழிபட்டு வர வேண்டும். தொடர்ந்து 12 வாரங்கள் வழிபட்ட பின்பு சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் படைத்து வழிபாட்டை முடித்துக் கொள்ள வேண்டும். இது போல நீங்கள் ஒவ்வொரு வாரமும் தவறாமல் செய்து வரும் பொழுது 12 வாரத்திற்குள் உங்களுக்கு நினைத்த வேலை கிடைக்கும் என்பது ஐதீகம்.

சிலருக்கு அரசாங்க வேலையில் நாட்டம் அதிகமாக இருக்கும். அதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். சிலருக்குவெளி நாடு சென்று வேலை செய்ய வேண்டும் என்கிற கனவும், லட்சியமும் இருக்கும். அதற்காக உரிய ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருப்பார்கள்.

இப்படி முயன்று கொண்டிருக்கும் வேலையில் ஏதாவது தடைகள், தடங்கல்கள் வந்தாலும் நீங்கள் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் புதன் கிழமையில் பிள்ளையாருக்கு இந்த எளிய செவ்வாழை மாலை சாற்றி வழிபடும் பரிகாரத்தை செய்யலாம்.



e-magazine
aanmeegamalar.com

# உடலையும் மனதையும் எளிமையாக கட்டுப்படுத்த சித்தர்கள் செய்த ரகசியம்



"காக்கைமூக்கை யாமையா
ரெடுத்துரைத்த காரணம்
நாக்கையூன்றி யுள்வளைத்து
ஞானநாடி யூடுபோ
யேக்கைநோக்க வட்சர
மிரண்டெழுத்து யேத்திடிற்
பார்த்தபார்த்த திக்கெலாம்
பரப்பிரம்ம மானதே"

– இந்த பாடலை கீழே உள்ளது போல் தனித் தனியாக பிரித்து பார்த்தால்

"காக்கை மூக்கை
ஆமையார் எடுத்துரைத்த காரணம்
நாக்கை ஊன்றி உள் வளைத்து
ஞான நாடி ஊடுபோய்
யாக்கை நோக அட்சரம்
இரண்டெழுத்து ஏத்திடில்
பார்த்த பார்த்த திக்கெல்லாம்
பரப்பிரம்மம் ஆனதே"

என்று இப்பாடலை பிரித்து படிக்கலாம்.

ஆன்மிகமலர் .காம்

இப்பாடலின் முதல்வரி "காக்கை மூக்கை ஆமை யார்" என்பது காக வடிவ காகபுகண்டர், திருமூலர், அகத்தியர் என மூவர் சொன்ன யோக தத்துவத்தை குறிப்பது என்பார்களும் உண்டு, அதே நேரம் இது கால் கை மூக்கு என எல்லாம் அடக்கி ஆமைபோல் ஐம்புலன் அடக்கி நின்று தவம் செய்வதை குறிப்பதாகவும் உண்டு



எப்படியானாலும் யோக நிலையினை இப்பாடல் குறிக்கின்றது, ஐம்புலன் அடக்கி நாக்கை உள்ளே மடித்து யோகம் செய்தால் அப்படியே அகரம் உகரம் எனும் இரு அட்சரங்களை சொல்லி சொல்லி தவமிருந்தால் பரம்பிரம்மத்தை காணும் திசையெங்கும் காணலாம் என்பது பாடலின் பொருள்

ஆன்மிகமலர்

இது கேசரி யோகம் எனும் நாக்கை உள்மடித்து செய்யும் யோகத்தை சொல்வது அதனால் அமிர்தம் சுரக்கும் நிலையினை அடைவது

**“எல்லையி லின்னமிர்த முண்டாங்**
**கினிதிருக்கில்**
**தொல்லை முதலொளியே யாம்”**

அதாவது அன்னாக்கில் எவ்வளவு எல்லையில்லாத அளவு அதிகமாக அமிர்தம் சுரக்கிறதோ, அப்போது, இந்த ஆன்மா எங்கிருந்து வந்ததோ அந்தப் பழைமையான, ஆதியான, அந்த ஒளியுடன் கலக்கும். அதுவே முக்தியாகும் என்பது பொருள்.

அதாவது யோகத்தின் உச்சியில் சக்கரங்கள் துலங்கும் போது அன்னாக்கில் சில துளி அமிர்தம் உருவாகும், அந்த அமிர்தம் பெரும் பெரும் பலன்களை கொடுக்கும்.

அது நாடி நரம்பெல்லாம் பாய்ந்தபின் உடல் உணவை தேடாது உடல் சுகங்களை தேடாது முழுவதும் இறைபரவச நிலையிலே அது ஒருவனை கட்டிபோட்டு வைத்திருக்கும் இந்நிலையினை பெற்றவர்களே சித்தர்கள்.

வேதத்தில் ஒரு வரி உண்டு

“சூரியனிடத்தே இருந்து மூன்று உளுந்து அளவு நீரை வரவழைத்து, சுவீகரிக்க வேண்டும்“ என்பது, சில சம்பிரதாயங்களில் மூன்று சொட்டு நீர் பிராமண குருக்கள் அருந்துவதை காணலாம் இதன் சம்பிரதாய பொருள் மூன்று சொட்டு நீர் என இருந்தாலும், அதன் தத்துவ பொருள் சூரிய கலையின் உச்சியில் யோகத்தில் துலங்கும் பொழுது உருவாகும் அந்த அமிர்ந்தத்தை மூன்று துளி உண்ண வேண்டும் என்பது

அது ஒரு யோக ரகசிய தத்துவ குறியீடு, உள் நாக்கில் அமிர்தம் சுரக்கும் குறியீடு

“விந்துவும் நாதமும் மேவி உடன்கூடிச்
சந்திர னோடே தலைப்படு மாயிடின்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாமே”

என திருமூலர் பாடுவதும் இந்த நிலையே

இதனை கேசரி யோகம் அல்லது இலம்பிக யோகம் என்பார்கள், கேசரி என்றால் சிங்கம் என பொருள், யோகங்களில் தலையாவது என்பது அதன் பொருள் அந்த கேசரி யோகத்தால் எல்லா சக்கரங்களையும் தூண்டி அதன் உச்சியில் உள்நாக்கில் அமிர்தம் சுரக்க வைத்து நீண்ட காலம் நலமாக தெளிவாக வாழ்வது முனிவர்கள் ரிஷிகளின் ரகசியம், இதைத்தான் இப்பாடலில் சொல்லி போதிக்கின்றார் சிவவாக்கியார்.

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும் ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 195 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்



e-magazine
aanmeegamalar.com


# முருகனின் சிறப்பும் அற்புத தகவல்களும்

- முருகன் அழித்த ஆறு பகைவர்கள் ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.
- முருகப்பெருமான் போர் புரிந்து அசுரர்களை அழித்த இடம் மூன்றாகும். 1. சூரபத்மனை வதம் செய்ததுதிருச்செந்தூர், 2. தாரகாசுரனை வதம் செய்தது திருப்பரங்குன்றம், 3. இந்த இருவரின் சகோதரனான சிங்க முகாசுரனை வதம் செய்தது போரூர் ஆகும்.
- செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் அதிகாலையில் குளித்து முடித்துத் தூய்மையுடன் ஸ்ரீஸ்ரீ சுப்பிரமண்ய அஷ்டகம் ஓத வேண்டும். இதனால் தோஷம் விலகி நன்மை உண் டாகும்.
- முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் என்ற ஆறு ஆயுதங்களும், இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் போன்றவையும் இருக்கும்.
- கந்தபுராணத்தில் வரும் சுப்பிரமணியஸ்தோத்திரம் தினசரி அதிகாலையில் படிப்பவர்களது அனைத்துப் பாவங்களும் நிவர்த்தியாகும்.
- முருகப் பெருமானை வணங்கத் திதி, சஷ்டி, விசாகம், கார்த்திகை, திங்கள், செவ்வாய்,

ஆன்மிகமலர்

ஆகிய உகந்த நாட்கள் ஆகும்.

- முருகன் கங்கையால் தாங்கப்பட்டான். இதனால் காங்கேயன் என்று பெயர் பெற்றான். சரவணப் பொய்கையில் உதித்தான். ஆகையினால் சரவண பவன் என்று அழைக்கப்பட்டான். கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டதால் கார்த்திகேயன் என்றும் சக்தியினால் ஆறு உருவமும் ஓர் உருவமாக ஆக்கப்பட்டதால் கந்தன் என்றும் பெயர் கொண்டான்.
- முத்தமிழால் வைதாரையும், வாழ வைப்பான் முருகன் என்று அருட்கவி அருணகிரி பாடியுள்ளார்.
- அக்கினி, இந்திரன், வருணன், பிரகஸ்பதி, ஹிரண்ய கர்ப்பம் ஆகியோரின் கூட்டுக் கலவையே முருகன் ஆவான்.
- முருகனின் கையில் உள்ள வேல் இறைவனின் ஞானசக்தி எனப் பெயர் பெறும்.
- முருகனே திருஞான சம்பந்தராய் அவதாரம் செய்தார் என்று பலர் பாடியுள்ளனர்.
- பிரமசரியகிருகஸ்தசந்நியாசக் கோலங்களில் முருகனை மட்டுமே காண முடியும். பிற கடவுள்களுக்கு இல்லாத சிறப்பு இது.
- தமிழகத்தில் முருகனுக்குக்குடவரைக் கோயில்கள் உள்ள இடங்கள் கழுகுமலை, திருக்கழுக்குன்றம், குன்றக்குடி, குடுமியான்மலை, சித்தன்னவாசல், வள்ளிக் கோயில், மாமல்லபுரம்.
- பசிபிக், சிஷில்ஸ், பிஜி, மடகாஸ்கர் நாடுகளிலும் முருகன் வழிபாடு உள்ளது.
- மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்குச் சிலம்பன் என்றோரு பெயர் உள்ளது.
- முருகனுக்கு விசாகன் என்றும் ஒரு பெயர் உண்டு. விசாகன் என்றால் மயிலில் சஞ்சரிப்பவன் என்பது பொருளாகும்.
- முருகனின் கோழிக் கொடிக்கும் குக்குடம் என்றோர் பெயருண்டு. இந்தக் கோழியே வைகறைப் பொழுதில் ஓங்கார மந்திரத்தை ஒளி வடிவில் உணர்த்துவது ஆகும்.
- முருகப்பெருமானுக்கு உகந்த மலர்கள் முல்லை, சாமந்தி, ரோஜா, காந்தன் முதலி யவை ஆகும்.
- முருகனை ஒரு முறையே வலம் வருதல் வேண்டும்.
- முருகனைப் போன்று கருப்பை வாசம் செய்யாத வேறு தெய்வம் வீரபத்திரர்.





- முருகப்பெருமானுக்காகக் கட்டப்பட்ட முதல் திருக்கோவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒற்றைக் கண்ணூர்த் திருக்கோவில் ஆகும். முதலாம் ஆதித்த சோழன் இதனைக் கட்டினான். இந்தக் கோவிலில் முருகனுக்கு யானை வாகனமாக உள்ளது. ஒரு திருக்கரத்தில் ஜபமாலையும், மறுகையில் சின்முத்திரையும் கூடிய நிலையில் இங்கே அருள்பாலிக்கிறார்.
- முருக வழிபாடு என்பது ஷண்மதம் என்று சொல்லப்படுகின்றது.
- முருகன் சிறிது காலம் நான்முகனுக்குப் பதில் படைப்புத் தொழிலையும் செய்திருக்கிறார். இதனை உணர்த்தும் வகையில் திண்டுக்கல்லில் இருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள சின்னாளப்பட்டியில் நான்கு தலையுள்ள முருகன் ஆலயம் அமைந்துள்ளது.
- கந்தனுக்குரிய விரதங்கள்: 1. வார விரதம், 2. நட்சத்திர விரதம், 3. திதி விரதம்.
- முருகனின் மூலமந்திரம் ஓம் சரவணபவாய நம என்பதாகும்.

– எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265

ஆன்மிகமலர் .காம்

# கந்தனும் அஹிம்சையும்



கந்தனைத் தவிர மற்ற கடவுள்கள் அசூரனை வதம் செய்தார்கள், சூரன் என்று அரக்கனை வதைக்காமல் அரக்க மனத்தை மட்டும் வதைத்து அஹிம்சைக்கு முதல் அடி எடுத்து கொடுத்தவனே முருகப்பெருமான்தான்.

“சந்தக் கவிதைகளால் கந்த பெருமாளை தமிழுக்கு சொந்த கடவுளாக்கி”த் தந்த அருணகிரியின் திருப்புகழ் பற்றி கூறுகிறேன்.

மணக்க மணக்க திருக்குறளாய் உயர்ந்து நிற்கும் “திருப்புகழை படித்தால் வெறுப்புகளை விலக வைக்கும், பொறுப்புகளை உணர வைக்கும்.”

திருப்புகழ் பாடினால் முருகன் தோன்றுவாரா என்ற சந்தேகம் காளி பக்தன் சம்மந்தனுக்கும் வந்தது. அருணகிரியை வாதத்திற்கு அழைத் தான்.

திருவண்ணாமலை வளைகாப்பு மண்டபத்தில், அருணகிரி திருப்புகழை பாடினார், பாடினார், பாடினார். ஆனால் முருகன் வரவே இல்லை. காரணம், குழந்தையாக்கி முருகனை உன் மடி யிலேயே வைத்துக்கொள் என காளி பக்தன் சம்மந்தம் காளியோடு போட்ட ஒப்பந்தம்.

“மதுர வாணி தானாட மலரில் வேத னாராட  
மருவு வானு ளோராட ...... மதியாட  
வனச மாமி யாராட நெடிய மாம னாராட  
மயிலு மாடி நீயாடி ...... வரவேணும்“

என திருப்புகழில் கடவுளோடு மயிலையும் இணைத்து அருணகிரி பாட, மயில் தோகை விரித்தாட, பார்வதி பாலமுருகனுக்கு மயிலை காட்ட, மயிலேறி பாலமுருகன் 16 வது துணை பிளந்து தன் கன்னித் தமிழ் முகத்தை காட்டி னான்.

திருவண்ணாமலையில் இன்றைக்கும் திருப் புகழ் சாட்சியாய் அந்த தூணிலிருந்து புறப்பட்ட சந்நிதியே இருக்கிறது. அன்னை காளியின் மீது சம்மந்தம் தான்கொண்ட பக்தியை மிஞ்சியது அன்னை தமிழ் மீதும் ஆறுமுகத்தின் மீதும் அருணகிரி கொண்ட பக்தி.

பக்தி இலக்கியம் ஆன்மீக பணிக்கு மட்டுமா அடித்தளமிட்டது, திருப்புகழ் வழியே இந்த மண் ணில் தமிழ் பணியும் தேசப்பணியும் அல்லவா நடக்கிறது.

“எந்தை வருக ரகுநா யகவருக  
மைந்த வருக மகனே யினிவருக  
என்கண் வருக எனதா ருயிர்வருக

...... அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல

...... வருமாயன்

சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய

...... அடுதீரா"

ஆன்மிகமலர்

என்று திருச்செந்தூர் திருப்புகழை பாடக்கேட்ட வங்காளத்தை தாய்மொழியாக கொண்ட சுனில் குமார் சட்டர்ஜி தன் பெயரையே நன்னெறி முருகன் என்று மாற்றிக் கொண்டார் என்றால், அது தமிழ் தெரியாத வங்காளியை கூட நம் தமிழை கற்க வைத்து நமது பங்காளியாக்கிக் கொண்ட பெருமை திருப்புகலழையே சேரும்.

1917களில் ஆங்கில புத்தாண்டுக்கு முதல் நாள் ஆங்கில துறையை அடிமைத்தனத்தோடு வணங்கிய தமிழர்களை, அந்நிய துறையை

வணங்குவதை விட தணிகைத் துறையை திருப்புகழால் வணங்குங்கள் என விடுதலை உணர்வூட்டி வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகளால் ஆறுபேரோடு தொடங்கப்பட்ட திருத்தணிகை திருப்புகழ் படி பூஜை விழா இன்றைக்கும் புத்தாண்டுக்கு முதல் நாள் ஆறு லட்சம் பேரோடு வெகு சிறப்பாய் நடக்கிறது.

வேலாயுதனை பற்றி அருணகிரி எழுதிய திருப்புகழ் எனும் நூல், "ஆயுதம் ஏந்தி இந்த மண்ணில் ஆன்மீகத்தோடு தமிழும் தேசப் பணியும்" வளர்ந்திருக்கிறது.

"சூலை சொறி ஈளை வலி
வாதமொடு நீரிழிவு
சோதனைகள் மாலை
சுரமோடு பிணி தூறிருமல்
சூழல் உற மூல கசுமாலம்
என் நாறி உடல் அழிவேனோ"

(சூலை நோய், சொறி நோய், கோழை, இழுப்பு, வாயு மிகுதலால் வரும் பிணிகள், நீரிழிவு, இரத்தமின்மையால் வரும் சோகை, கண்ட மாலை, காய்ச்சல் இவைகளுடன் சேர்ந்துள்ள கக்குவான் இருமல்) இவை தானே கொரோனாவின் அறிகுறிகள்.

கொரோனாவை பற்றியும் அன்றைக்கே திருப்புகழில் அருணகிரிநாதர் கூறியிருக்கிறார் என்றால் சமூகப்பணியும் திருப்புகழ் செய்திருக்கிறது அல்லவா.



"திருக்குறளாய் உயர்ந்தது திருப்புகழ். ஏனென்றால் திருக்குறள் எல்லா உயிர்களையும் இணைத்து பாடியது. திருப்புகழ் எல்லா கடவுளையும் இணைத்து பாடியது."

அறுசமய சாத்திரப் பெரியோனே என அருணகிரியே பாடியிருக்கிறார். அதனால்தான் வாக்கிற்கு அருணகிரி என்றார்கள்.

திருமந்திரம், திருவாசகம் என இந்த பக்தி இலக்கியத்திலும் ஆயிரம் பாடல்கள் பாடி நாம் ஆயிரம் விண்ணப்பம் வைத்தாலும் திருப்புகழ் பாடுவதே சைவ மரபாகும்.

"தீப மக்கள ஜோதி நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேக குஞ்சரி பாலா நமோ நம
அருள் தாராய்!!!"

ஆன்மிகமலர்

– சௌமியா சுப்ரமணியன்
பழைய பல்லாவரம்,
சென்னை 600117



aanmeegamalar.com e-magazine



# உடலை காக்கும் கந்த சஷ்டி கவசம்

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம் .காம்

கந்தர் சஷ்டி கவசம் சொல்லும் போது நம் உடலில் உள்ள ஒவ்வொரு பாகங்களையும் ஒவ்வொரு வேல் காக்குமாறு பிரார்த்திக்கிறோம். உதாரணமாக ஒரு சில வரிகளைப் பார்ப்போம்...

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிச்செவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய் தனைப் பெருவேல் காக்க!
கன்னமிரண்டும் கருனைவேல் காக்க!
என் இளங்கழுத்தை இனியவேல் காக்க!

என்று இப்படியே உடலில் ஒரு அங்கம் விடாமல் வேல் காக்க என்று கூறுகிறோம்.

இப்படி தினசரி நாம் வாயால் ஒவ்வொரு அவயவங்களைப் பற்றி சொல்லும் போது நமது மனது அந்த அங்கத்தில் நிலை கொள்கிறது.

மனது தியானிக்கும் அங்கத்தினை நமது மூளை தானாகவே ஒருசில வினாடிகள் கூர்ந்து கவனிக்கிறது.

இப்படி மூளையின் தனி கவனத்திற்க்கு வரும் போது அந்த பாகத்திற்குரிய மூளையின் செயல்பாடுகள் சிறப்படைகிறது. இப்படி தின சரி மிகவும் அமைதியான மனநிலையில் நாள் இரு முறை நம் உடல் பாகத்தினை மூளையின் கவனத்திற்க்கு கொண்டு வந்தால் உடலின் சிறு சிறு குறைபாடுகளை மூளை தாமாகவே சரி செய்து கொள்ள தூண்டுதலாக அமையும்.

மனோவைத்திய ரீதியாக உடல்நோய் களைப் போக்க முடியும் என்று தற்காலங் களில் நாம் ஆராய்ச்சியாளர்கள் சொல்லி கேட்பதில்லையா! இன்றைக்கு ஆராய்ச்சி என்று சொல்லி வெள்ளைக்காரன் கண்டு பிடித்ததாகச் சொல்லுவதை நம் முன்னோர்கள் ஏற்கனவே கண்டறிந்தது மட்டுமல்லாமல் அவற்றைப் பயன்பாட்டில் செயல்படுத்தியும் வந்திருக்கிறார்கள்.

இந்த மனோவைத்திய முறை நம் வாழ்க்கை முறையாகவும் இருக்கிறது.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

கந்தர் சஷ்டியை தினசரி சொல்லும் போது நம் உடல் முழுவதும் மூளை செயல்பாடு அதிகரிப்பதால் இது ஒரு பாதுகாப்பு கவசமாக இருப்பதாலேயே இதை கந்தர் சஷ்டி கவசம் என்று கூறினார்கள்.

இந்த கவசத்தில் வரும் வரிகளில் நவ கோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும் என்று ஒரு வரி உண்டு. வார்த்தைகளால்சொல்லும் மந்திரத்தினால் நவகோள்கள் எப்படி நன் மை செய்யும் என்றும் தோன்றலாம். நவ கிரகங் களின் மாறுதல்களால் பூமியின் மீதே பாதிப்பு ஏற்படும் போது மனித உடலில் பாதிப்பு ஏற்படாதா என்ன?

கிரகங்களின் மற்றத்தால் நமது உடலில் ரத்த ஓட்டம் மற்றும் வாத பித்த பாதிப்புகள் ஏற்படுகிறது. உடலில் ஏற்படும் எந்த ஒரு வியாதிக்கும் இவற்றில் ஏற்படும் மாற்றமே அடிப்படை. ஆனால் கவசம் படிப்பதன் மூல மாக தினசரி மூளை நமது உடலை உற்று நோக்கி தானே தன்னைச் சரி செய்யும் வேலையை செய்து கொண்டே இருப்பதால் நவ கோள்களால் ஏற்ப்படும் உடல் மாறுபாடு கூட பாதிப்பை ஏற்படுத்தாது என்பதே இதன் சாரம். அதையே நவகோள்கள் கூட மகிழ்ந்து நன்மை அளிப்பதாக கூறினார்கள்.

இப்படி கந்தர் சஷ்டி கவசம் தொடர்ந்து படிப்பதில் மனோவியல் ரீதியான நன்மைகள் உள்ளன.

ஆனால் ஆராயாமலே தற்க்காலத்தில் எல்லாவற்றையுமே மூடநம்பிக்கை என்று சொல்லும் பகுத்தறிவாளர்களுக்கு இது புரிவது சாத்தியமில்லை. ஏனென்றால் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அடிப்படை அறிவே கூட இருப்பதில்லை என்பதே உண்மை.

ஆகையால் இந்து தர்மத்தில் சொல்லப்படும் பல அறிவியல் மற்றும் மனோரீதியான சூட்சு மங்களை புரிந்து கொள்ளும் நீங்கள் தான் உண்மையான பகுத்தறிவாளர்கள். ஆகையால் இந்து தர்மம் என்பது மனோவியலும் அறிவிய லும் ஆகும்.

நீங்களும் இதை ஏற்றுக் கொண்டால் தாமதிக்காமல் இன்றே படிக்கத் துவங்கலாமே!

**காக்க காக்க கனகவேல் காக்க!**
**நோக்க நோக்க நொடியில் நோக்க!**




ஆன்மிகமலர்
மெயில் புக்
இதுவரை வெளிவந்த
அனைத்து இதழ்களையும்
எந்தவித கட்டணமின்றி
முற்றிலும் இலவசமாக
படித்து பயன்பெற
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்

## கார்க்கோடகன் வழிபட்ட

# காமரசவல்லி

தரணி போற்றும் தமிழகத்தில் ஈசன் புரிந்த மகிமைகள் ஏராளம். அதிலும் சோழ மண்ணிலோ சொல்லில் அடங்காதவை. அவ்வகையில் சிறப்பு பெற்றத் திருத்தலமாகத் திகழ்கிறது காமரசவல்லி. அதன் சிறப்புகளைப் பார்ப்போம்.

மன்மதன் என்னும் காமனைத் தனது நெற்றிக் கண்ணால் சுட்டெரித்தார் சர்வேஸ்வரர். காமன் மீது தீராக் காதல் கொண்ட ரதிதேவி அவனை மீட்க, ஈசனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தாள். ஈசன் தோன்றி, “காமனை உயிர்ப்பிக்கிறேன். ஆனால் உன் கண்களுக்கு மட்டுமே தெரிவான்” என ரதிதேவிக்கு மாங்கல்ய பிச்சையிட்டார் மகா தேவர். ரதிக்கு வரம் தந்த தலம் என்பதனால் இப்பதி‘ரதிவரபுரம்‘ என்றும், காமரசவல்லி என்றும் ஆதியில் போற்றப்பட்டது. தற்போது காமரசவல்லி என்று அழைக்கப்படுகின்றது.

ஆன்மிகமலர் .காம்

அர்ஜுனனின் பேரனான அபிமன்யுவின் மகன் பரிக்ஷித்து மன்னன் ஒரு சமயம் வேட்டையாட காட்டுக்குள் சென்றான். அங்கே இறந்து கிடந்த பாம்பினை எடுத்து தவம் செய்து கொண்டிருந்த முனிவரின் கழுத்தில் விளையாட்டாக போட்டு விட்டான். இதனால் கோபம் கொண்ட முனிவரின் மகன், அன்றிலிருந்து ஏழாவது நாளில் பாம்பு கடித்து இறந்து போவாய் என பரிக்ஷித் மன்னனுக்கு சாபம் அளித்தான். அதன்படி ஏழாவது நாளில் கார்க்கோடகன் என்னும் பாம்பினால் கடிக்கப்பட்டு இறந்தான்.

இதனால் மனம் கொதித்தான் பரிக்ஷித்தின் மகன் ஜனமேஜயன். மாபெரும் வேள்வி ஒன்றை நடத்தி, உலகில் உள்ள எல்லா பாம்புகளையும்பிடித்து, அதில் போட்டு அழித்தான். இதை கேள்விப்பட்ட எட்டு சர்பராஜர்களுல் ஒருவனான கார்க்கோடகன் தனக்கு ஆபத்து வரக்கூடாது என திருமாலிடம் சரணடைந்தான். திருமாலோ, காவிரி வளமாக்கும் சோழ தேசத்தில் ரதி தேவி பூஜித்த சிவலிங்கத்தை வழிபடும்படி ஆலோசனை கூறினார்.

அதன்படி இத்தலம் வந்த கார்க்கோடகன், தீர்த்தம் உண்டாக்கி, அந்த தீர்த்தத்தால் சிவ பெருமானை பூஜித்து, வழிபட்டு, தனக்கும், தன் வம்சத்தினருக்கும் ஏற்பட்ட ஆபத்திலிருந்து விடுபட்டான் என இத்தலம் மகாத்மியம் விவரிக்கின்றது.

இவவூரில் பாம்பு கடித்து இறந்தவர்கள் யாரும் இல்லை என்பது இத்தலத்தின் மகிமையாகும். இப்பதி திருநல்லூர், சதுர்வேதிமங்கலம், ரதிவரபுரம், கார்கோடகேஸ்வரம் மற்றும் காமரசவல்லி







போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் திருமடம் இங்கு இருந்ததன் காரணமாக இத்தல தேவாரப்பதிகம் தவறியிருக்கக்கூடும் என அறிஞர்கள் கருதுகின்றனர். காஞ்சி மகா பெரியவாள் 1950ல் இங்கு தங்கி ஈசனுக்கு தனது கரங்களினாலேயே அபிஷேகம் செய்துள்ளது சிறப்பாகும்.


ஆன்மிகமலர்

ஊரின் மேற்குப் பகுதியில் பிரம்மாண்டமாக அமைந்துள்ளது ஆலயம். ஆலயத்தின் எதிரே கார்க்கோடக தீர்த்தம் மிகப்பெரிய அளவில் உள்ளது. கிழக்கு நோக்கி ஆலயம் நான்குபுறமும் உயர்ந்த மதில்சுவர்கள் சூழ, தோரணவாயிலுடன் திகழ்கிறது.

நுழைவு மண்டபம் கலைத் துண்களுடனும், திண்ணைகளுடனும் திகழ்கிறது. உள்ளே செல்ல... பலிபீடம், கொடிமரம்மற்றும் நந்தி மண்டபம் உயரமான இடத்தில் உள்ளன. இங்கே தனி விமானத்துடன் கூடிய அம்பாள்சன்னதி தென்முகமாக அமைந்துள்ளது. இது வெளிப்பிரகாரமாகும்.

படிகள் ஏறி சன்னதிக்குள் சென்று அன்னையை வணங்குகின்றோம். ஸ்ரீ பாலாம்பிகை என்கிற பெயர் கொண்டு சிறுபிள்ளைபோல் முகத்தை காட்டி திருவருள் பொழிகின்றாள். அன்னையை வணங்கிய பின் படிகள் இறங்கி, மீண்டும் சிவன் சன்னதி படிகளில் ஏறுகின்றோம். இங்கு மூன்று நிலைகள் கொண்ட சிறிய இராஜகோபுரம் காணப்படுகிறது. கீழே கணபதி மற்றும் கந்தன் குடி கொண்டுள்ளனர்.

உள்ளே பெரியதொரு மகா மண்டபம். அதன் வடபுறம் அம்பலவாணர் சன்னதி அமைந்துள்ளது. இங்கே அன்னை சிவகாமியுடன் கூடிய ஸ்ரீ நடராஜப் பெருமான் அற்புத திருக் கோலத்தில் அருட்காட்சி









யளிக்கின்றார்.

உடன் மாணிக்கவாசகரும் வீற்றுள்ளார். இவ்வாலயத்தில் ரதிதேவிக்கு உற்சவர் திருமேனி யுள்ளது சிறப் பாகும். நேராக ஸ்வாமி சன்னதிக்கு முன்பு ஆஜானுபாகுவாக இரு துவாரபாலகர்கள் கம்பீரமாய்த் திகழ்கின்றனர். மீண்டும் பணிகள் சில கடந்து அர்த்தமண்டபத்திற்குள் நின்றவண்ணம் ஈசரை வணங்கி நிற்கிறோம்.

கருவறையில் ருத்ராக்ஷ பந்தலின் கீழே சதுர ஆவுடையாருடன் அற்புதமாக அருள்மழைப் பொழிகின்றார் ஸ்ரீ சௌந்தரேஸ்வரர். பெய ருக்கு ஏற்றார் போல் அவரது அழகில் நம் ஆன்மாவை கவர்ந்திழுக்கின்றார். இவரை ஸ்ரீ கார்கோடகேஸ்வரர் என்றும் அழைக்கின்றனர் அன்பர்கள். ஐயனை மனம் ஒன்றி வணங்கி, வெளியே வந்து உள்பிரகாதார வலத்தைதொடங்கு கின்றோம்.

ஆன்மிகமலர்

ஈசனது கருவறை கோஷ்டத்தைத் தரிசிக்கின் றோம். எங்கும் காணாத அதிசயமாக 11 மாடங் கள் உள்ளன. இதை ஏகாதச கோஷ்டம் என்று அழைப்பர்.

இந்த 11 மாடங்களில்...நர்த்தன கணபதி, நடராஜர், தக்ஷிணாமூர்த்தி, அகத்தியர்,அர்த்தநாரீ ஸ்வரர், லிங்கோத்பவர், கங்காளர், பிரம்மா, ஆலிங் கனர், பிக்ஷாடணர் மற்றும் அஷ்டபுஜ துர்கை ஆகிய தெய்வச் சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவை சோழர்களின் கலையையும், பக்தியையும் பறைசாற்றுகின்றன.

தென்மேற்கில் கணபதியும், மேற்கில் வள்ளி தெய்வானை உடனான ஸ்ரீ சுப்பிரமணியரும், வடமேற்கில் ஸ்ரீ கஜலட்சுமியும் தனித்தனியே சன்னதி கொண்டு அருள்பாலிக்கின்றனர்.

வடகிழக்கு பகுதியில் நாகராஜர் சிலையும், இரண்டு பைரவர்களும் உள்ளனர். இங்கே நவக்கிரகங்களும் வீற்றுள்ளனர். கணபதி, நந்தி மற்றும் கார்க்கோடகன் சிவபூஜை செய்யும் சிற்பங்கள் இவ்வாலய தூண்களில் படைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

ஆலய வெளிப்பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் கிணறு ஒன்று காணப்படுகிறது. ஆல யம் பிரமிப்பையும், கலைநயத்தையும் கலந்து ஊட்டுகின்றன.

இவ்வாலயத்தில் சுமார் 45 கல்வெட்டுக்கள் காணக் கிடைக்கின்றன. சோழர்கள் பாண்டியர்கள் மற்றும் போசள மன்னர்கள் இவ்வாலயத்தின் மீது தனி கவனம் செலுத்தியுள்ளனர்.

இராஜராஜ சோழனின் தந்தையான இராஜ கேசரி வர்மன் என்னும் சுந்தரச் சோழனால் கி.பி. 957 – 974 காலகட்டத்தில் கட்டப்பட்ட ஆலயமிது.

கி.பி.1240–இல் போசள மன்னன் வீர இராமநாதனால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. கி.பி.1240–இல் இவ்வூரில் நடந்த நலத் தகராறில் சிறந்த தீர்ப்பை வழங்கியுள்ளான் போசளமன்னன் வீர சோமேஸ்வரன்.

சுந்தர சோழன், உத்தமசோழனின் மகன் முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் குலோதுங்கன், இரண்டாம் மற்றும் மூன்றாம் குலோதுங்கன், காடவர்மன்,




மூன்றாம் இராஜராஜன், திருபுவன சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவன் மற்றும் ஹொய்சால மன்னர்களின் கல்வெட்டுகள் ஆலயமெங்கும் செதுக்கப்பட்டுள்ளன.

ஆன்மிகமலர் .காம்

சோழர் காலத்தில் இந்த ஆலயத்தை அந்தணர்கள் நிர்வகித்து வந்துள்ளனர். ஊரை ஒட்டிய சில கிராமங்களும் அந்தணர்களுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வூரில் வேதபாராயண போட்டிகளும், சத்சங்கக் கூட்டங்களும் அதிக அளவில் நடந்துள்ளன. அதோடு திருவாதிரை திருவிழாவும் விமர்சையாக நடந்துள்ளதாக கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது. இத்தல ஈசன் சோழர் காலத்தில் "திருநல்லூர் பரமேஸ்வரர் திரு கார்கோடக ஈஸ்வரத்து மகாதேவர்" என்று அழைக்கப்பட்டுள்ளார்.

தினசரி ஆலய வழிபாட்டிற்கு மாலைகள் கட்ட நந்தவனம் அமைக்கப்பட்டிருந்தது. அது 'பிச்சதேவன் நந்தவனம்' என்று அழைக்கப்பட்டுள்ளது. இந்த நந்தவனத்தை பராமரித்து வந்தவர்கள் வசிப்பதற்கென ஒரு பகுதி இருந்தது. அது 'திருத்தொண்டத் தொகையன் வளாகம்' என்று கூறப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயம் தினமும் காலை 7.30 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7.30 மணி வரையும் திறந்திருக்கும். தினமும் இரண்டு கால பூஜைகள் நடைபெறுகின்றன.

**ஒவ்வொரு வருடமும் மாசி மாத பௌர்ணமியன்று காமன் பண்டிகை இங்கு கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினம் இரண்டாக வெட்டிய ஆமணக்கு செடியை நட்டு வைப்பர். அது ரதிதேவியின் வாழ்க்கை துளிர்ந்ததுபோல் எட்டு நாட்களுக்குள் துளிர்ந்துவிடுமாம். இது இங்கு மட்டுமே நடக்கும் அதிசயமாகும்.**

மற்றைய அனைத்து சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற நடத்தப்படுகின்றன.

மாங்கல்ய பலம் வேண்டுவோர் இத்தல அம்பிகைக்கு மாங்கல்யம் சாற்றி பிரார்த்திக்கின்றனர். திருமணத்தடை நீங்கவும், நல்ல வரன் அமையவும், குழந்தைப்பேறு கிட்டவும், பிரிந்த தம்பதியர் ஒன்று சேரவும் இத்தல வழிபாடு ஓர் சிறந்த பரிகாரத்தலமாகும்.

அதோடு, சர்ப்ப தோஷம் மற்றும் முன் ஜென்ம சர்ப்ப சாபங்களால் சுப காரியங்கள் தடைபட்டிருந்தால்... இத்தல ஈசனுக்கும், அம்பிகைக்கும் அபிஷேகம் நடத்தி, நீல நிற வஸ்திரங்கள் சாற்றி, புளியோதரை படைத்து பலன் பெறுகின்றனர் பக்தர்கள். ரதிதேவிக்கு ஈசன் அருளி யது கடக ராசி, கடக லக்னம் என்ப தால்... கடக ராசிக்காரர்கள் வழிபட உகந்த திருத்தலமிது.


மோ.கணேஷ்

வழி: தஞ்சை அரியலூர் நெடுஞ்சாலையில் உள்ள திருமானூரிலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது காங்கிரசவல்லி.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

இதுவரை வெளிவந்த

# 195 க்கும் மேற்பட்ட இதழ்களை

eBook DOWNLOAD free

aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

Scan to Read aanmeegamalar e-book




# விராலிமலை முருகன் கோவிலுக்கு வழிதெரியாமல் தவித்த அருணகிரிநாதர்

# வேடன் உருவில் தோன்றி வழிகாட்டிய முருகன்

விராலிமலை முருகன் கோயில் தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை வட்டம் விராலிமலையில் புதுக்கோட்டைக்கு வட மேற்கில் 41 கிலோமீட்டர் தொலைவிலும் திருச்சிக்கு தெற்கே 34 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த விராலிமலையின் மீது ஏறுவதற்கு சுமார் 207 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலே செல்லும் வழியில் இளைப்பாற மண்டபங்கள் கட்டப்பட் டுள்ளன. மலையின் உச்சியில் அடர்த்தியாக மரங்களுக்கு நடுவில் கோவில் அழகே வடிவாய் அமைந்துள்ளது.

இப்போது கோயில் இருக்கும் மலைப்பகுதியில் குரா மரம் இருந்தது. வேடன் ஒருவன் வேங் கையை விரட்டி வரும்போது குராமரம் இருக்கும் இடத்தில் வேங்கை காணாமல் போய்விடுகிறது. குரா மரம் இருக்கும் இடத்திலேயே இறைவன் இருப்பதாக எண்ணி வழிபாடு நடந்திருக்கிறது. அருணகிரிநாதரை விராலிமலைக்கு வா என்று முருகப்பன் பெருமான் அழைக்க அவ்வாறே வந்த அருணகிரிநாதர் குறிப்பிட்டு இடம் தெரியாமல் தவிக்க வேடன் ரூபத்தில் வந்து விராலிமலைக்கு வழி சொல்லி அழைத்துச் சென்று மலையை அடைந்தவுடன் மறைந்து விடுகிறார் .அஷ்டமா சித்தியை அருணகிரிநாதருக்கு இந்த தலத்தில் உள்ள முருகப்பெருமான் வழங்கியதால் இந்த தலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்தக் கோயிலில் ஒரு காலத்தில் நடந்த திருப்பணியில் கருப்ப முத்து என்ற பக்தர் ஈடுபட்டார். ஒருநாள் பலத்த காற்றுடன் மழை பெய்தது. அருகில் இருந்த நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து



e-magazine
aanmeegamalar.com



ஓடியது. ஆற்றை கடக்க முடியவில்லை. முருகனைப் பிரார்த்தித்தார் குளிர் தாங்காமல் சுருட்டு ஒன்றை பற்ற வைத்தார். அப்போது அவர் அருகே ஒருவர் நடுங்கியபடி வந்து நின்றார். அவர் மீது இரக்கப்பட்ட கருப்ப முத்து உங்களுக்கும் சுருட்டு வேண்டுமா என கேட்டார் வந்தவரும் சுருட்டை வாங்கிக்கொண்டார். அந்த நபர் கருப்ப முத்துவுக்காக ஆற்றைக்கடக்க உதவி செய்தார். பின்னர் காணாமல் போய்விட்டார். கருப்ப முத்து கோயிலுக்கு சென்று முருகனை தரிசன செய்தபோது அவர் முன்னால் சுருட்டு இருந்ததை கண்டு அதிர்ந்தார். கருப்ப முத்து நடத்தவற்றை கூற அங்கு இருந்த அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

ஆன்மிகமலர் .காம்

அன்று முதல் மாலை வேலை பகுதியில் முருகனுக்கு சுருட்டு நெய்வேத்தியமாக படைக்கும் பழக்கம் ஏற்பட்டது. இடைக்காலத்தில் புதுக்கோட்டை மகாராஜா இந்த பழக்கத்திற்கு தடை விதித்தார். அவர் கனவில் தோன்றிய முருகன் எனக்கு சுருட்டு படைப்பது மற்றவருக்கு உதவி செய்யும் மனப்பான்மை வளர வேண்டும்என்பதற்காகத்தானே தவிர புகைக்கும் பழக்கத்திற்கு முக்கியத்துவம் தருவதற்காக அல்ல. துன்பப்படும் ஒருவனுக்கு ஏதோ ஒரு வழியில் உதவி செய்ய வேண்டும் என என் பக்தர் விரும்பினார்.

அதற்காகவே அவர் தந்த சுருட்டை தகுதியற்றதாகினும் அன்புடன் ஏற்றுக் கொண்டேன். இந்தப் பழக்கம் தொடரட்டும் தடை செய்யாதே என்றார்.

e-magazine
aanmeegamalar.com




அதன் பிறகு இன்று வரை இந்த பழக்கம் இருந்து வருகிறது. இந்த சுருட்டை பிரசாதமாக பெற்று வீட்டில் கொண்டு போய் வைக்கின்றார்கள். இறைவனுக்கு என்ன படைக்கிறோம் என்பது முக்கியமல்ல பக்தியும் அன்புமே முக்கியம் என் பதை எடுத்துக்காட்டும் வகையில் இந்த நிகழ்வு நடந்திருக்கிறது.

ஆன்மிகமலர்

வள்ளி திருமணம் நடந்த தலம் என்று கூறப்படுகிறது. மூலவர் முகம் முருகப்பெருமான் பத்தடி உயரத்தில் இருப்பது சிறப்பாகும்.

சுமார் 2000 வருட பழமை வாய்ந்த ஆலயம். ஆறுமுகங்களுடன் அசுர மயில் அமர்த்த படி அற்புதமாக காட்சி தருகிறார். முருகன் எப்படியும் இங்கே 1500 மயில்களுக்கும் அதிகமாக இருக் கின்றன. என்று பக்தர்கள் சொல்கின்றனர்.

அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிய தலம் இது. வயலூரில் அருணகிரிநாதருக்கு காட்சி தந்த முருகன் விராலிமலைக்கு வரச் சொல்லியதால் இங்கு அருணகிரிநாதர் வந்துள்ளார். வய லூரிலிருந்து கிளம்பிய அருணகிரிநாதர்முருகப் பெருமான் சொன்ன விராலிமலை எங்கிருக்கிறது என்று வழி தெரியாமல் தவிக்கவே வேடன் ரூபத்தில் முருகப்பெருமான் வந்து அருணகிரி நாதர் வழிகாட்டி அழைத்து வந்ததாக சொல்லப் படுகிறது. அத்தகைய சிறப்பு வாய்ந்த தலம் விராலிமலை தலமாகும்.

வயலூரில் ஓம் என்று நாவில் எழுதி திருப்புகழை பாட வைத்த திரு முருகனைமுருகப்பெருமான் இந்த விராலிமலை தளத்தில் தான் அருணகிரி நாதருக்கு அஷ்டமாசித்தி வழங்கி உள்ளார். இந்த தலத்தில் பலகாலம் தங்கி இருந்த அருணகிரி நாதர் இந்த தளத்து தன் திருப்புகழில் உருகி பாடியுள்ளது இத்தலத்திற்கு பெருமை க்கு சான்று.

திருவண்ணாமலைக்கு ஈடாக ஏராளமான ஞான சித்தர்கள் இந்த மலையில் தவம் செய்து உள்ளார்கள். மயில்கள் நிறைந்த மலை .முருகப் பெருமான் வீற்றிருக்கும் தெற்கு பார்த்த மயில் அசுர மயில் என்று அழைக்கப்படுகிறது.

விராலிமலை சண்முகநாதர் கோயிலில் நாரதர் உற்சவர் ஆக இருக்கிறார் .பிரம்மாவின் ஆணவத்தை அடக்குவதற்காக சிவன் அவரது ஒரு தலையை கொய்தார். அப்போது நாரதர் தன் தந்தை எந்த தவறும் செய்யவில்லை என்று அவரிடம் வாதிட்டார். இதனால் அவர் சிவநிந்தனைக்கு ஆளானார். அவரது தம்புரா வும் வளைந்தது .எனவே இந்த தலத்தில் முருகப் பெருமானை வணங்கி விமோசனம் பெற்றார். இதன் அடிப்படையில் இங்கு நாரதர் உற்சவர் ஆக இருக்கிறார். இவரது தம்புரா வளைந்து காணப்படுகிறது.

இங்கு உள்ள வீரபாகுவின் திருமேனி ஐந்து அடி உயரத்திற்கு மேல் இருப்பது நாம் எந்த ஆலயத்திலும் காணாத காட்சியாகும். பாதி மலை யேறியதும் இடும்பர் கடம்பர் சன்னிதி உள்ளது.

வைகாசி விசாகம் தைப்பூசம் கந்த சஷ்டி திருவிழா, அருணகிரிநாதர் இசை விழா ஆகிய விழாக்கள் ஆண்டுதோறும் இந்த ஆலயத்தில் வெகு விமர்சையாக நடக்கின்றது.

மோ.கணேஷ்

# கட்டாய சந்தா இல்லை!

# சப்ஸ்கிரைப் இல்லை!!

# மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

## ஆன்மிகமலர்.காம் வழங்கும்
## ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 185 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# யுகந்தோறும் தோற்கும் கடவுள்

**நமது குடும்பத்தில் உள்ள ஒருவரை, கேவலமாக பேசியவரை, எப்படி நமது நண்பனாக, உறவினராக ஏற்றுக் கொள்ள மாட்டோமோ, அதுபோன்று நமது இறைவனையும், நமது வழிபாட்டு முறையையும் விமர்சிக்கும் கூட்டத்தை ஒவ்வொரு இந்துக்களும் இழிவுபடுத்த வேண்டும்**

மனிதப் பிறவி என்பது வாழ்க்கையை வாழ்வதற்கு மட்டும் இறைவனால் கொடுக்கப் பட்டது கிடையாது. இன்று மனிதர்கள் அனுபவிக் கும் எந்த ஒரு சுகபோகமும் குறிப்பிட்ட காலத்திற் குப் பின் காலாவதி ஆகிவிடும் தேதியுடனே பூமியில் படைக்கப்பட்டது.

தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம், மண், பதவி, புகழ் இவை அனைத்தும் ஒவ்வொருகால கட்டத்தில் ஒவ்வொருவரிடம் மாறி மாறி செல் லும், இவை இருக்கும்போது மனித மனதை ஆட் கொண்டு தனது பணியை செவ்வனே செய்யும்.

நல்ல மனிதனிடம் மேற்கண்டவை கிடைத்தால் நல்லமுறையில் பயன்படும், அவன் மறைந்தாலும் சில காலம் அவனின் நினைவை இந்த பூமியில் சிறிது காலம் நிலைநிறுத்த வைக்கும்.

அதே தீய எண்ணம் கொண்டோரிடம் கிடைக்கும்போது, மேற்கண்டவைகளின் வீரியம் தீவினையாக மாறி அந்த மனிதர்களை அவை ஆட்கொண்டு, அவர்களின் அன்பு, பண்பு, மதிப்பு, மரியாதை போன்றவற்றை சூரையாடி அந்த மனிதனை கபளிகரம் செய்துவிட்டு, அடுத்தவர் கைக்கு சென்றுவிடும்.

தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம், மண், பதவி, புகழ் இவை அனைத்தையும் பூமியில் உள்ள மனிதர்களை ஆய்வு செய்வதற்காக இறை வனால் படைக்கப்பட்ட ஆய்வுக்கூடமே.

இவற்றின் போதையை ஒரு மனிதன் சுவாசிக்க துவங்கிவிட்டால், அவன் அவனை தெய்வத்திற்கு இணையாக பாவித்துக் கொண்டு சுடர்விட்டு எரியும் விளக்குத் திரிபோல் பிரகாசிக்க ஆரம்பித்து, கடைசியில் ஒன்றுமில்லாத திரியின் சாம்பலைப் போன்று கருகிப் போவான்.

மேற்கண்டவற்றை சரியான வழியில் பயன்படுத்த தெரிந்தவனோ மிகப் பெரிய அளவில் சுடர்விட்டு எரிந்துவிடாமல், குளிர்ச்சி தரும் மெல்லிய ஒளியை தரும் அளவிற்கு பிரகாசித்து, அந்த ஒளியின் வாயிலாக பல்வேறு தரப்பினர் நன்மை பெரும் வகையில் நின்று நிதானமாக எரிந்து, பல ஆயிரக்கணக்கா னோருக்கு பயன் பட்டு மெல்ல கருகி போவான்.

இதில் யாராக இருந்தாலும் கருகிய திரியைப் போன்று கருகிப்போவது என்பது பொதுவான தாகும், அந்த கருகலின் போது அவற்றின் மூலம் அடைந்த பலனே உலகில் ஆய்வுக்குரியதாக பார்க்கப்படுகிறது.

இதுபோன்ற ஆய்வில் பிறந்ததுதான், நல்லது, கெட்டது, நல்ல சக்தி, தீயசக்தி.

நல்லவற்றை ஏற்பது கடினம், ஆனால் பலன் அதிகம்.

தீயவை மனிதனை ஆக்கிரமித்து, அவனுக்கு உடல் அளவில் சுகபோகங்களை வாரி இறைக்கும், ஆனால் குறுகிய காலத்தில் அவனை படு

e-magazine
aanmeegamalar.com



பாதாளத்திற்குள் தள்ளிவிட்டு, அடுத்தவரை நாடி சென்றுவிடும்.

இந்த யுக்தி யுக யுகமாக எந்தவித மாறுதலுமின்றி தொடர்கிறது.

புராணங்களின் படி, யுகங்கள் நான்கு. கிருதயுகம், திரேதா யுகம், துவாபர யுகம் மற்றும் கலியுகம். இந்த நான்கு யுகங்கள்சேர்த்து ஒரு சதுர்யுகம் அல்லது மகாயுகம் என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு யுகத்திலும் வாழ்பவர்களின் வாழ்க்கையை பரிசோதித்துக் கொண்டுதான் இருக்கிறது.

**கிருதயுகம்:** அறநெறியுடன் வாழ்வார்கள்.

**திரேதாயுகம்:** நான்கில், மூன்று பகுதிஅறநெறியுடனும் ஒரு பகுதி அறமில்லாமலும் வாழ்வார்கள்.

**துவாபரயுகம்:** சரிபாதி அறநெறியுடனும் மறுபகுதி அறமில்லாமலும் வாழ்வார்கள்.

**கலியுகம்:** நான்கில், ஒரு பகுதி அறநெறியுடனும் மூன்று பகுதி அறமில்லாமலும் வாழ்வார்கள்.

என்று புராணங்கள் கணித்து கூறியுள்ளது. இது இன்றளவும் நடைமுறையில்தான் உள்ளது.

இதை புராணங்கள் வாயிலாகமட்டுமே அறிந்து கொள்ள முடியுமா? என்றால் இல்லை...

நேரிடையாகவே அறிந்து கொள்ளும் அளவிற்குதான் கலியுகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

இதில் கடவுள் நம்பிக்கை, கடவுள் நம்பிக்கையின்மை என்ற இரண்டு வடிவங்களில் ஒவ்வொரு யுகந்தோறும் அளவீடு நடைபெறுகிறது.

இந்த அளவீட்டை இறைவன் பல யுகங்களாக நடத்திவருகிறான். ஆனால் ஒவ்வொரு யுகத்திலும் கடவுள் தோற்றுக்கொண்டேதான் இருக்கிறான்.

இதிகாச யுகங்களின் ஒருபுறம் கடவுள், மறுபுறம் அவரை எதிர்க்கும் எதிரிகள்.

கடவுள் நம்பிக்கையுடன் உள்ள மக்களுக்கு பல்வேறு வகையில் இன்னல்கள் வரும், ஆனால் அவற்றை பொருட்படுத்தாமல், இறை சிந்தனையுடன் வாழ்ந்து இறைவனடி சேரும் ஒவ்வொரு ஆத்மாவும் இறைவனுக்கு சமமாக போற்றப்படுவார்கள்.

ஆனால் முழுவதும் இறைநம்பிக்கையை கடைபிடிக்காமல், கைவிடும் கூட்டமே ஒவ்வொரு யுகத்திலும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

திரேதாயுகத்தில் அரக்கர்கள் வடிவில் மக்களை மிரட்டி இறை சிந்தனையை போக்கப்பட்டது.

துவாபர யுகத்தில் அரக்கர்கள் மற்றும் அரசாளும் ஒருசில மன்னர்கள் வாயிலாகவும் இறை சிந்தனை போக்கப்பட்டது.

ஆனால் கலியுகத்தில் அரக்கர்கள் வடிவில் வெவ்வேறு மதப்பிரிவுகளும், அரசாளுபவர்கள், அரசாங்கம் நடத்துபவர்கள் வாயிலாக இறை சிந்தனையை போக்கும் செயல் நடந்து கொண்டு வருகிறது.

இதில் கொடுமை என்னவென்றால், இறைவன், அரக்கன் என்ற பாகுபாட்டை அறிந்து கொள்ள முடியாமல், மக்கள் திணறுவதுதான் உச்சகட்ட வேடிக்கை...


மற்ற இரு யுகங்களில் அரசாளும் ஒருசில அரக்கர்குல அரசர்களுக்கு அஞ்சி இறைவனை வணங்காமல், அரக்கர்களையே இறைவனாக பாவித்து கும்பிட வைத்தனர்.

ஆனால் இந்த கலியுகத்தில், மிக விசித்திரமாக ஒரு பக்கம் கோவிலுக்கு போய், சாமி கும்பிட்டு, விரதம் அனுஷ்டித்து, தங்கள் பொருளாதாரத் தேவைக்காக பல்வேறு ஜோதிட ரீதியாக பரிகாரங்கள் செய்து, கோயில் குளம் என்று ஏறி இறங்கும் மனிதர்கள்தான், கோவிலுக்கு வெளியே வந்ததும் சாமியை தூற்றும் கூட்டத்துடன் சுற்றுவது, சாமி சிலையை உடைப்பது,

கோவில் வழிபாட்டு உரிமையை தடுக்கும் அதிகாரவர்க்கத்தினர், கடவுள் எதிர்ப்புசக்திகளுடன் சேர்ந்து கொண்டு இந்து கடவுள்களையும், சம்பிரதாயங்களையும், சாஸ்திர, வேத, பாராயணங்களுக்கு தடை விதிப்பது போன்ற செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

சுகபோக வாழ்க்கைக்கு தடை வரக்கூடாது என்று ஒருபுறம் கடவுளை வணங்குதல், மறுபுறம் பதவி, மாற்றுமத சிந்தனை போன்ற ஆக்கிரமிப்பால்

e-magazine
aanmeegamalar.com



**அரசியலில் வாக்கு வாங்க இந்துக்கள் முன்பு சாமி கும்பிடுவது, வெளியே வந்து மற்ற மதத்தவர்களின் வாக்குக்காக இந்துக் கடவுள் சிலைகளை உடைப்பது.**

கடவுளை எதிர்ப்பது, சமத்துவம் என்ற பெயரில் வணங்கும் கடவுளை ஏசுபவர்களுடன் நட்பு பாராட்டுவது போன்றவை அதிகம்.

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால்...

கூட்டுக்குடும்பமாக வாழும் ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள், வீட்டில் இருக்கும்போது மிகவும் அன்பாக பழகி, வீட்டிலிருந்து வெளியே வந்தால், அந்த குடும்பத்தில் உள்ள உறவினர்களையே ஆபாசமாக ஏசும் கூட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, அவர்களுடன் சேர்ந்து தங்கள் குடும்ப உறுப்பினர் களை ஆபாசமாக திட்டுவதும்,

மீண்டும் வீட்டிற்கு சென்று அதே குடும்ப உறுப்பினர்களிடம் கூடி மகிழ்வதும் எவ்வளக் கெவ்வளவு ஈனத்தனமான செயலோ, அதே செயலைத்தான் தற்போதைய காலகட் டத்தில் பல்வேறு இந்துக்கள் செய்து கொண்டிருக் கின்றனர்.

ஆன்மிகமலர் .காம்


ஒருபாதி கடவுளை ஏற்பது, ஒருபாதி கடவுளை அவமதிப்பது,

கடவுளுக்கு செருப்புமாலை, கடவுள் சிலையை சாலை உடைப்பது, மத சடங்குகளை அவமதிப்பது, பெண்கள் தாலியை மேடையில் அறுத்து கணவன் இருக்கும்போதே கழுத்து முடமாக மாற்றுவது, இந்துக்கள் வழிபாட்டு உரிமையை பறிப்பது, இவற்றை செய்யும் அரக்கர்கள் கூட்டத்துடன் கைகோர்த்து சமத்துவம், நடுநிலை என்ற பெயரில் இறைவனையும், இறை சிந்தனையையும் கொச்சைப்படுத்தும் கூட்டத்தால் இந்துமதக் கடவுள்கள் கலியுகத்தில் கேட்பாரற்று கிடக்கும் ஜடப்பொருளாக கடவுளின் பக்தர்களே மாற்றி விட்டனர்.

தேவைக்கு இறைவனை வணங்குதல், தேவை யில்லை என்றால் நடுநிலை பெயரில் இறைவனை அவமதித்தல், இறைவனை காப்பாற்ற சாதாரண மக்கள் நாம் யார் என்று கேள்வியை கேட்கும் ஒவ்வொரு நடுநிலைவாதியும் அறியவேண்டியது.

**இறைவனை வசைபாடினால், நாக்கை அறுத்து எறிந்த, சத்தி நாயனாரை ஏற்றுக் கொண்டதும் இறைவனே, சத்தி நாயனா ரைப் போன்று இறைவனை வசைபாடுபவர் களையும், எதிர்ப்பவர்களையும் களை**

e-magazine
aanmeegamalar.com




e-magazine

aanmeegamalar.com

யெடுக்க சொல்லவில்லை.

இந்துமதத்தையும், நமது தெய்வத்தையும் வசைபாடும் கூட்டத்தை புறக்கணித்தாலே போதும், ஒருபுறம் தேவைக்கு இறைவனை வணங்கி, மறுபுறம் இறைவளை வசைபாடுபவர்களுடன் உறவாடுவது எவ்வளவு கீழ்த்தரமான செயல்.

இறைவனை வணங்குவதைவிட, இறைவனை யும், ஆலயங்களையும், நமது குடும்பத்துடன் ஒன்றிணைத்து ஒவ்வொரு இந்துக்களும் பார்க்க வேண்டும்.

நமது குடும்பத்தில் உள்ள ஒருவரை, கேவலமாக பேசியவரை, எப்படி நமது நண்பனாக, உறவினராக ஏற்றுக் கொள்ள மாட்டோமோ, அதுபோன்று நமது இறைவனையும், நமது வழிபாட்டு முறையையும் விமர்சிக்கும் கூட்டத்தை ஒவ்வொரு இந்துக்களும் இழிவுபடுத்த வேண்டும்

யுகந்தோறும் தோற்கும் கடவுள்

யுகந்தோறும் பக்தர்களின் வேண்டுதல்களை தீர்த்துவைக்கும் இறைவனும், மன நிம்மதியை கொடுக்கும் வழிபாட்டுத் தலங்களும், வழிபாட்டு முறைகளும், ஒருசில நடுநிலைவாதிகளால் யுகந்தோறும் தோற்கும் கடவுளாகவே எண்ணத் தோன்றுகிறது.

இந்துக்களாக இருந்து மதம் மாறிய மாற்று மதத்தவர், தாங்கள் மாறிய மதத்தை எவ்வளவு கடுமையாக கடைபிடிக்கின்றனர்.

எண்ணதான் ஆழமான நட்புடன் அவர் களுடன் பழகினாலும், அவர்களின் மதத்தையோ, தெய்வத்தையோ, அவர்களின் வழிபாட்டு முறை களிலோ, ஏதேனும் குறைகளை கூறினால் யாராக இருந்தாலும் எந்த உறவு முறையாக இருந்தாலும் அவர்கள் ஒன்று கூடி எதிர்க்க துணிவார்கள்.

ஆனால் இந்துக்களில் நடுநிலை என்ற பெயரில் எருமை மாட்டின் மீது மழை பெய்வதைப் போன்று நாம் கடந்து சென்றுவிடுகிறோம்.

கடவுளிடம் வேண்டுதல்களை மட்டும் வைத்து மனம் உருக, உடல் உருக வேண்டுதல் செய்யும் இதுபோன்ற நடுநிலைவாதிகளிடம் கடவுள் மட்டும் அல்ல நமது இந்து மதமும் ஒவ்வொரு யுகத்திலும் தோற்று போகிறது.

இதுபோன்ற மனோபாவத்தால் யுகந்தோறும் தோற்கும் கடவுள் கோவில்களில் இன்றும் யாரையும் கைவிடாமல் அனைத்து செல்கின்றார். ஒவ்வொரு இந்துக்களும் அவசியம் சத்தி நாயனார் வரலாற்றை படிக்க வேண்டும் என்று கடவுள் நினைக்கவில்லை, இந்துமத நம்பிக் கையாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# உயிரைச் சுற்றி அறிவே அன்பாக சுற்றும் போது ஆத்மா அன்பே வடிவாக ஆகிறது

சீடன்: கொலு ஏன் இவ்வளவு பெரிதாக கொண்டாடப்படுகிறது?

ஞானி: பூலோக இரகசியம் விழாவாக தான் கொண்டாடப்பட வேண்டும். லௌகீகம், தெய்வீகம் இரண்டும் ஒன்று என்பதுதான் கொலு. இந்த ஒன்பது நாளும் தேவியை உள்ளத்தில் வைத்து புரிந்து கொண்டால் தான் வெளியில் உள்ள தேவியின் கோலங்கள் புரியும்.

சீடன்: தேவி உபாசனையில் உடனடி பலன் என்ன?

ஞானி: சித்தம் நம்மிடம் இருக்க உதவுகிறது. அது நம்மிடம் இல்லாதபோது தான் இன்னது செய்கிறோம் என்று சமாதான நிலையில் கூடத் தெரியாது.

சீடன்: தேவி உபாசனைக்கு குரு மிக முக்கியம் அல்லவா?

ஞானி: எதற்கு குரு வேண்டாம்? உங்கள் மார்க்கத்திற்கு முடிவு வேண்டும் என்று எண்ணி தான் குருநாதர் முன்னிலையில் வந்து அமருகிறீர்கள்.

சீடன்: நம் எண்ணங்களை குருநாதனுக்கு தெரிவிக்க வேண்டாமா?

ஞானி: உங்கள் எண்ணங்கள் உங்கள் பக்தியின் பெருமை குருநாத னுக்குத் தெரியவேண்டிய அவசியம் இல்லை, உங்களுக்கு விளங்க வேண்டும்.

சீடன்: உலக இன்பங்கள் எங்கள் முயற்சிக்கு தடை செய்கிறதே?

ஞானி: சிற்றின்பத்திற்கும், பேரின்பத்திற்கும் உரிய பொருள் கடவுள். வேறு இல்லை என்பதை உணர்ந்தால் தடைகள் விலகும்.

சீடன்: தேவிக்கு வித வித அலங்காரங்கள் செய்கிறார்களே?

ஞானி: அலங்காரம் செய்வதற்கு ஆண்டவனின் நினைவு வேண்டும். நினைவில் இல்லாதவர்களை பூஜை பண்ண முடியாது.

சீடன்: இதனால் சந்தோஷம் முழுமையடையுமா?

ஞானி: எதையாவது உணர்ந்தவர்களுக்கு கொஞ்சம் சந்தோஷம், எல்லாவற்றையும் உணர்ந்தவர்களுக்கு முழுமையான சந்தோஷம், இது தேவியின் அருளால் மட்டுமே கிட்டுகிறது.

சீடன்: கொலுவை ஞானிகளும், மகான்களும் எப்படி பார்க்கிறார்கள்?

ஞானி: கொலுவைப் பார்ப்பது என்பது சிருஷ்டியின் கோலாகலத்தை பார்ப்பது போன்றது. கோலாகலத்தைப் பார்த்தவன் ஆத்மபலன் பெற்றவன் என்று பொருள்.

சீடன்: கொலுவில் தேவியின் முன் பக்தன் எப்படி இருக்கிறான்?

ஞானி: பக்தர்கள் தங்கள் வடிவத்தை உணர்ந்தவர்கள் பொம்மைகளாக, சுயமான செயலிழந்தவர்களாக அம்பாள் முன்னிலையில் அமருகிறார்கள்.



சீடன்: தேவி உபாசர்களுக்கு அனைத்தும் தேவி தானா?

ஞானி: எந்த பக்தனுக்கும் அனைத்துமே இறைவன் தான். நாமே நம்மை இயக்கிக் கொண்டால் வெற்றியும், தோல்வியும் வரும். தோல்வி வந்தால் பக்தி வருவது கடினம்.

e-magazine
aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

அதனால் பக்தன் அனைத்தையும் கடவுளுக்கே என்று அர்ப்பணிக்கிறான்.

சீடன்: எந்த மதக் கடவுளையும் வணங்கலாமா?

ஞானி: அது உன் மனப்பக்குவத்தைப் பொறுத்தது. முசல்மானாகப் பிறந்து கிருஷ்ண பக்தி செய்தார் இலத்தீப் சுவாமிகள். அதனால் இழுக்கு ஏற்பட்டது அவருக்கல்ல. அவரை குற்றம் சொன்னவர்களுக்கு.

சீடன்: இது ஹிந்துவுக்கும் பொருந்துமல்லவா?

ஞானி: உலகிலுள்ள எல்லா பக்தர்களுக்கும் இது பொருந்தும்.

சீடன்: ஆனால் இதை சமுதாயம் ஏற்காதே?

ஞானி: அதைப் பற்றி உனக்கென்ன கவலை? உன் அழுக்கை துடைக்க முயலும்போது அடுத்தவர் அழுக்கை துடைக்க முயலாதே, உன் அழுக்கு அப்பொழுது அதிக மாகிறது.

சீடன்: கிருஷ்ண பக்திக்கும் இது பொருந்துமல்லவா?

ஞானி: எல்லா தெய்வங்களும் இதில் அடக்கமே. மனதைக் கொடுக்காமல் கை கால் கண்ணைக் கொடுத்து கேள்விகள் கேட்டு என்ன பலன்?

சீடன்: அழுக்கு போக மறுக்கிறதே?

ஞானி: உயிரின் மீது விருப்பம் உள்ள கடவுள் அழுக்கைப் பார்ப்ப தில்லை. உயிரோடு அழுக்கு ஒட்டுவதில்லை. அதனால் உடனே கடவுளை விரும்பு.

சீடன்: அது போதுமா?

ஞானி: போதும். ஒவ்வொரு மனிதனும் தன்னிடமுள்ள அழுக்கை பக்தி செய்து துடைக்க முயலட்டும். ஜாதி வேண்டுமா, மதம் வேண்டுமா என்பதை கடவுள் பார்த்துக் கொள்வான்.

சீடன்: இப்படி செய்தால் எல்லா பேதங்களும் ஒழியுமே?

ஞானி: நிச்சயமாக. உயிரைச் சுற்றி அறிவே அன்பாக சுற்றும் போது ஆத்மா அன்பே வடிவாக ஆகிறது. அதுவே கடவுள், பக்தி, சமயம் எல்லாம். அப்பொழுது பேதங்கள் எல்லாம் ஒழியும்.

சீடன்: இதை உலகம் உணருமா?

ஞானி: உண்மையான ஆத்மசாதனைக்குச் செல்பவனை ஆண்டவன் ஒருவனே உணருகிறான்.

சீடன்: இறைவனை நினைவில் கொள்ள இந்த எண்ணம் மட்டும் போதுமா?

ஞானி: இந்த எண்ணம் ஒன்று. கோவில், உருவம், மந்திரம், குரு நாதன் இவைகளும் உதவும்.

சீடன்: இந்த உலக மாயையில் இருந்து விடுபட்டால் தானே இது முடியும்?

ஞானி: மாயையை எடு, நான் விளையாடுகிறேன், பக்தனாகிறேன் என்பது சராசரி மனிதனின் நிலை.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...



eBook
FREE DOWNLOAD

## aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com